# தேன்துளிகளும் தீப்பொறிகளும்

கவிதைகள்

வானவில் கே. ரவி

# தேன்துளிகளும் தீப்பொறிகளும்

**வானவில் கே.ரவி**


புதிய இலக்கு புதிய தடம்

**நிவேதிதா பதிப்பகம்**

4, ஸ்டெப் ஸ்டோன்ஸ், முல்லை அபார்ட்மெண்ட்ஸ்,
G1, வேலாயுதம் காலனி மெயின் ரோடு,
சாலிகிராமம், சென்னை 600 093.
89393 87296 / 89393 87295
**email : nivethithapathippagam1999@gmail.com**

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | தேன்துளிகளும் தீப்பொறிகளும் |
| ஆசிரியர் | : | வானவில் கே. ரவி© |
| பொருள் | : | கவிதைகள் |
| முதற் பதிப்பு | : | 2024 |
| அளவு | : | டெம்மி |
| தயாரிப்பு | : | நிவேதிதா பதிப்பகம்<br>4, ஸ்டெப் ஸ்டோன்ஸ்,<br>முல்லை அபார்ட்மெண்ட்ஸ்,<br>G1, வேலாயுதம் காலனி<br>மெயின் ரோடு, சாலிகிராமம்,<br>சென்னை - 600 093.<br>கைபேசி : 89393 87296 / 95 |
| ஒளியச்சு | : | வி. தனலட்சுமி |
| அட்டைப் படம் | : | சக்தி கிரியேட்டர்ஸ் |
| அச்சாக்கம் | : | விஷ்வா பிரிண்ட்ஸ், சென்னை-2. |
| பக்கங்கள் | : | 112 |
| விலை | : | **ரூ. 110** |

| | | |
|---|---|---|
| Title | : | Then Thuligalum Theepporigalum |
| Compiled by | : | Vanavil K. Ravi© |
| Subject | : | Poems |
| First Edition | : | 2024 |
| Size | : | Demmy |
| Published by | : | Nivethitha Pathippagam<br>4, Step Stones, Mullai Apartments,<br>G1, Velayutham Colony, Saligramam,<br>Chennai - 600 093.<br>Mobile No : 89393 87296 / 95 |
| Typeset by | : | V. Dhanalakshmi |
| Wrapper Design | : | Shakthi Creators |
| Printed at | : | Viswa Prints, Chennai - 2. |
| Pages | : | 112 |
| Price | : | **Rs. 110** |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தெய்வம் இவளா...! | 21 |
| 2. | மூலக் கயிறண்ணே...! | 23 |
| 3. | ஒருதுளிக் கண்ணீர்! | 25 |
| 4. | பிரித்துப் போடு | 27 |
| 5. | வாழ்க பாரதம் | 28 |
| 6. | தெருக்களின் பேச்சு | 30 |
| 7. | கலைந்து போனது கவிதையின் மௌனம் | 32 |
| 8. | பல பொழுதுகள் விடியும் | 33 |
| 9. | எத்தனை வீணைகள் மீட்டுகிறாய்...! | 35 |
| 10. | சொல் பூத்த வனத்தில்...! | 37 |
| 11. | காதலைப் பாடுகிறேன் | 39 |
| 12. | நதியின் அலைகளில் | 41 |
| 13. | திசையெங்கும் வாசல்களாம் | 42 |
| 14. | நீ தூவிய விதைகள் | 43 |
| 15. | காதல் இல்லை என்றால் | 45 |
| 16. | ஆச்சர்யம்! | 47 |
| 17. | அடைக்கும் தாழ் உண்டா? | 48 |
| 18. | கவிஞன் ஆக்குகிறேன் | 49 |
| 19. | தென்னை மரம் கேக்குது | 51 |
| 20. | அன்னைத் தமிழே | 53 |
| 21. | அவன் தீண்டத் தகாதவன் | 54 |
| 22. | நானே முதல் ரசிகன் | 56 |
| 23. | நான் ஒரு பயணி | 57 |
| 24. | சந்திக்கப் பாடுகிறேன் | 58 |
| 25. | செல்லம்மா கல்யாண வைபோகமே | 59 |
| 26. | வரலாற்றில் பங்கேற்க நான் அழைக்கிறேன் | 61 |

27. மணிப்பூரகச் செல்வியே! 63
28. பாரதி சின்ன பயல் 65
29. என்ன மாயம் செய்கிறாளோ 67
30. எத்தனை விண்மீன்கள்! 69
31. எப்படி வணங்குவது? 71
32. ஒவ்வொரு கதவாய்த் தட்டிப் பார்த்தும்.... 73
33. தன்னை இழத்தல் 74
34. அனைவருமே குருநாதர்களே 76
35. ஓர் எறும்பு ஊர்வலம் 78
36. உளறி விட்டுப் போகிறேன் 79
37. இதற்குத்தானே காத்திருந்தாய் 81
38. புத்தகம் நீதான் 83
39. சாளரக் கதவைச் சற்றே திறந்துவை! 84
40. புதியதோர் உலகம் செய்வோம்! 85
41. எதையும் மாற்றவில்லையா? 87
42. குறுக்குச் சுவர்கள் 89
43. என்னைப் பேச விடுங்கள்! 91
44. கவிதையும் உரைநடையும் 93
45. எழுதிக் கொண்டே இருக்கிறேன் 94
46. கடவுள் எழுதும் கவிதையே 96
47. ப்ரபஞ்சக் கவிஞன்! 97
48. பலூன்காரனா? 98
49. மஹாகவி! 100
50. தோழன்–தோழி 102
51. திறந்திடு சீஸேம் 103
52. இலக்கியம் ஓர் ஒத்திகை 105
53. தேன்துளிகளும் தீப்பொறிகளும் 107

# முன்னுரை

என் தமிழ்க் கவிதைகளின் ஐந்தாவது தொகுப்பு, இது. நாலாவதாக வெளிவந்த “சேமித்து வைத்த நிழல்கள்” நூலுக்குப் பிறகு எழுதப்பட்ட கவிதைகளும், அதற்கு முன்பே எழுதப் பட்டிருந்தாலும் அதில் விடுபட்ட சில கவிதைகளும் இந்நூலில் இடம்பெறுகின்றன.

இயன்றவரை, எழுதப்பட்ட காலவரிசைப்படியே, இந்நூலில், கவிதைகள் தரப்பட்டுள்ளன. இவற்றில் இசைப்பாடல்களும் உண்டு. இசைப்பாடல்களில் சிலவற்றை நானே பாடி யூடுப் தளத்தில் காணொலிக் கோப்புகளாகப் பதிவு செய்துள்ளேன். அந்தக் காணொலிக் கோப்புகளைத் திறக்கும் சுட்டிகளை அந்தந்த இசைப்பாடல்களின் தலைப்புகளுக்கு அடியில் தந்துள்ளேன்.

கவிதை என்றவுடனேயே மரபுக் கவிதைகளா, புதுக்கவிதைகளா என்று கேட்கும் வழக்கம் இன்னும் இருக்கிறது. அந்தப் பழமையில் இருந்து நாம் கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டுக் கொண்டிருந்தாலும், இன்னும் முழுமையாக விடுபடவில்லை. அதே போல், ஒரு கவிதை, சமூகப் பிரக்ஞை உள்ள கவிதையா, மாயாவாதக் கவிதையா, தத்துவக் கவிதையா, நவீனத்துவக் கவிதையா, பின்நவீனத்துவக் கவிதையா என்றெல்லாம் ஆய்வுகள் இன்னும் செய்யப்படுகின்றன. எப்படியாவது ஒரு படைப்பை ஒரு சின்ன கோப்பையில் அடைத்து அதற்கு ஒரு பெயரை ஒட்டி, இலக்கிய அலமாரியில் உள்ள அடுக்கில் வைத்து மூடிவிடத் துடிக்கும் மருந்துக்கடை வழக்கம் இன்னும்

உள்ளது. என் கவிதைகளும் அப்படி ஆய்வு செய்யப்படக் கூடிய விபத்து நேரிடலாம். அப்படிச் செய்யப்படக் கூடாது என்று சொல்ல நான் யார்?

எழுதி முடித்தவுடன் எனக்கும் என் படைப்புக்கும் உள்ள தொடர்பு முற்றுப் பெறுகிறது. அதற்குப்பின் நானும் அந்தப் படைப்புக்கு ஒரு வாசகனே. ஒரு சின்ன திருத்தம் தேவைப்படுகிறது. ஆம், எழுதி முடித்தபின் மட்டும் இல்லை, எழுத முனையும் போதே நானும் என் படைப்புக்கு ஒரு வாசகன். அதன் முதல் வாசகன், முதல் ரசிகன் நான்தான். நான் ரசித்ததைத்தான் மற்றவர்களுக்கும் தருகிறேன்.

உடல்சார்ந்த வாழ்க்கையைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டு, "கருதிக் கருதிக் கவலைப் படுவார்" பலர். அவர்கள் நடுவே, உடல்கடந்த வாழ்க்கை உண்டு என்ற நம்பிக்கை வீரத்துடன் வெட்டவெளியெங்கும் சுற்றித் திரிந்து, தான் அள்ளிக் கொண்டு வந்த அமுதத் துளிகளை மற்றவரும் பருகத்தரும் இலக்கியப் படைப்பாளர்கள் சிலரே. அப்படிப்பட்ட இலக்கியப் படைப்பாளிகள் வரிசையின் கடைசியிலாவது நான் நிற்கிறேன் என்ற பெருமிதத்தோடுதான் என் படைப்புகளை நான் வழங்குகிறேன்.

'என் படைப்புகள்' என்ற சொற்றொடர் சரியில்லைதான்; ஆனாலும், அவற்றைக் குறிக்க வேறு பெயர் இல்லாத நிலையில், நான் அச்சொற்றொடரைப் பயன்படுத்துகிறேன். என் குழந்தைகள் எந்த அளவு என் குழந்தைகளோ, அந்த அளவுக்கு மட்டுமே என் படைப்புகள் என்னுடைய படைப்புகள். என் குழந்தைகள் உலகுக்கு வர நான் ஒரு காரணமாகவும், கருவியாகவும் இருந்திருந்தாலும், அவரவர்களுக்கு அவரவர் வாழ்க்கை உண்டு என்பது போல், என் படைப்புகளுக்கு என்று தனி வாழ்க்கை உண்டு.

இந்தத் தொகுப்புக்கு யாரிடம் அணிந்துரை பெறலாம் என்ற கேள்வி எழுந்தபோது, என் இனிய நண்பரும், பாரதி கலைக் கழகத்தின் மூத்த கவிமாமணியும் ஆன இலந்தை ராமசாமியைத் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டேன். அவர் உடனே ஒப்புக் கொண்டார். அவர் ஒரு மிகச்சிறந்த கவிஞர்; பாரதியிடம் ஈடுபாடு மிக்கவர்; ஆங்கிலத்தில்

நான் எழுதிய 'குயிலி' என்ற வீரமங்கையின் வரலாற்றை மிகச்சிறப்பாகத் தமிழில் ஆக்கம் செய்து தந்துள்ளவர். அவருடைய அணிந்துரையால் இத்தொகுப்பின் மதிப்பைக் கூட்டியுள்ள கவிமாமணி இலந்தை ராமசாமிக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவதாக ஓர் அணிந்துரை பெறவும் நினைத்தேன். அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் என் படைப்புகள் குறித்த கருத்தரங்கத்தை, ஆங்கிலத்தில் சீரோடும் சிறப்போடும் நடத்திய ஆங்கிலப் பேராசிரியர் முனிரா என்ற அன்புச் சகோதரி உடனே நினைவுக்கு வந்தார். அவரும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டு நல்லதோர் அணிந்துரை வழங்கியுள்ளார். அவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனி, வாசகர்களுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் இந்நூலில் உள்ள கவிதைகள் மூலம் அவர்களோடு கலந்து பேசத் தயாராகி விட்டேன். என் உடல்வாழ்வைக் கடந்தும் அந்தத் தொடர்பு நிச்சயம் தொடரும்.

**நன்றி.**

அன்புடன்

வானவில் கே.ரவி

*19–12–2023*

# இரவியின் இராஜபாட்டை

## இலந்தை சு. இராமசாமி

கவிமாமணி க.இரவி இயற்றியுள்ள இந்த நூலை ஒருமுறைக்கு இருமுறை படித்து உள்வாங்கிக் கொண்டேன். உள்வாங்கிக் கொண்டேன் என்றா சொன்னேன். இல்லை, இல்லை. உள்வாங்கிக் கொள்ள முயன்றேன் என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால் ஒரு கவிஞன் கவிதை உத்வேகத்தால் படைக்கிற எதையும் படிக்கிற வாசகனால் அப்படியே உள்வாங்கிக்கொள்ள முடியுமா என்று தெரியவில்லை.

ஒரு மொந்தைத் தூண் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதை ஒரு சிற்பி பார்க்கிறான். அவனுக்கு அதற்குள் ஒரு கண்ணனோ கந்தனோ தெரியலாம். ஒரு பைத்தியக்காரன் அதைத் தன் காதலியாக நினைத்துக் கட்டிப் பிடித்துக்கொண்டு முத்தம் கொடுக்கிறான் . அவனைப் பொறுத்த மட்டில் அவனது கற்பனை உண்மை. அந்தத் தூண் அவனது கற்பனைக் காதலிதான். பார்க்கிறவனுடைய கற்பனைக்கும், நிலைக்கும் ஏற்ப பார்க்கப்படும் பொருளின் விளக்கமும் மாறுபடும்

**எண்ணத்திலே எழும் சிந்தனை பற்பல**
**எழுதிடக் கூடவில்லை.**
**எழுதிடும் யாவையும் படிப்பவர் நெஞ்சிலே**
**ஏறுமோ தெரியவில்லை. (இலந்தை இராமசாமி)**

எழுதிய கவிஞனின் உள்ளத்துள் புகுந்து அந்த நிலையிலேயே உள்வாங்கிக்கொள்ள முயன்றால் தான் அது சாத்தியம். முடிந்த அளவுக்கு அதைச் சாத்திய மாக்க முயன்றிருக்கிறேன்.

கவிதைக்குச் சொல் ஒரு சுமைதாங்கி. கவிதை ஏறி அமரும் வாகனம் யாப்போ யாப்பின்மையோ எதுவோ அது. அதைப்பற்றி இப்பொழுது நான் பேசப்போவதில்லை. சொல்லை வலிமையுடையதாகத் தேர்ந்தெடுத்துக் கவிதையை அதைச் சுமக்கவைக்கிற போது அது சுமக்கிறது. சுகமாகச் சுமக்கிறது..

அந்தச் சுமை படிப்பவனுக்குச் சுவையாக அமைந்து விடுகிறது. எல்லாச் சொற்களும் சுமையைத் தாங்குமா என்று தெரியவில்லை.

**சொல்லெலாம் சுமப்பதில்லை**
**சுவையெலாம் இனிப்பதில்லை**
**கல்லெலாம் சிலையைத் தாங்கும்**
**கனத்தினைப் பெறுவதில்லை**
**புல்லெலாம் பூஜை ஏற்கும்**
**புனிதமே கொள்வ தில்லை**
**வல்லவன் கையை வைத்தால்**
**வருவதோ அற்பு தந்தான் (இலந்தை இராமசாமி)**

இந்தக் கவிதையை முழுவதும் படித்த பிறகு கவிமாமணி இரவி அவர்கள் சொற்களைத் தேர்ந்தெடுப்பதில் வல்லவராக இருக்கிறார் என்பதையும் சொற்களின் திரட்சி கொண்டவராக இருக்கிறார் என்பதையும், தான் சொல்ல வந்த கருத்தை எளிதாக வாட்டமின்றி சுமக்கவைக்கும் திறமை கொண்டவராக இருக்கிறார் என்வதையும் அறிந்தேன். அவரது சொற்கள் சுமக்கின்றன சுவைக்கின்றன.

நான் அருணகிரி நாதரைப் பற்றி ஒரு கவிதை எழுதிய போது "அவரது பாட்டை இராஜ பாட்டை அறுமுக னிடம்தான் அது செல்லும்" என்ற எழுதினேன். இந்தத் தொகுதியில் இரவியும் ஒரு இராஜபாட்டையில் தான் செல்லுகிறார். அது "அவளை" நோக்கித்தான் செல்கிறது.

பாதிக்கு மேல் அது அம்பிகையை நோக்கியே நகர்கிறது. இராஜ பாட்டையில் நடக்கிற போது அங்கும் இங்கும் திரும்பிப்பார்க்கிற போது தென்படுவன மற்றக் கவிதைகளாகப் பூக்கின்றன. கொள்வதும் கொடுப்பதும் இக்கவிதைகளில் நடக்கின்றன. அவள் கவிஞனிடம் கொடுக்கிறாள். வாங்கிக் கொள்கிறாள். கொடுப்பதைப் பிறருக்குக் கொடுக்கச் செய்கிறாள்.

எனது பேராசிரியர் அ.சீ.ரா அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும் போது கவிதை, கடவுள், கணக்கு, என்னும் மூன்றும் கற்பனையால் உருவாகின்றன என்பதை விளக்கிச் சொன்னார். ஆம் கவிதை, கணக்கு, கடவுள் மூன்றுக்கும் கற்பனை மிக மிக முக்கியம். கவிதைக்கு அடிப்படை கற்பனை. “Poetry is a fine excess” என்று சொல்வார்கள். உண்மையின் மேல் ஏறி நின்று அந்த அழகிய மிகையைக் கவிதைக்குக் கொடுப்பது கற்பனை. கடவுளை ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு வகையாகக் கற்பிக்கிறார்கள். கணக்குக்கும் கற்பனைதான் அடிப்படை. புள்ளி என்று சொல்கிறோம். அதற்கு ஒரு பரிமாணத்தைக் கொடுக்கிறோம். ஆனால் அது பரிமாணமற்றது. பரிமாணமற்ற ஒன்றுக்குப் பரிமாணம் கொடுத்துக் கற்பனை செய்து கொள்கிறோம்.

இந்தக் கவிதைத் தொகுதியிலே தெருக்களின் பேச்சு என்று ஒரு கவிதை. இரண்டு தெருக்கள் பேசிக்கொள்கின்றன:

**ஒரு முனையில் சந்தித்துக் கொண்ட**
**இரண்டு தெருக்கள் பேசிக்கொண்டன - ஆம்**
**இரண்டு தெருக்கள் பேசிக்கொண்டன:**
**"தெருமுனை என்று சொல்கிறார்களே**
**அப்படி எதுவும் உண்டா?**
**நாம் ஒன்றா, இரண்டா?**
**நீயே வளைந்து நான் உருவானேனா?**
**நான் வளைந்து நீ உருவானாயா?”**

நாம் தெருமுனை என்று சொல்லுகிறோம். சந்திக்கும் அந்தத் தளம் முனையா? அப்படியில்லையென்றால் அது எது? தெரியாத ஒன்றை நமக்குத் தெரிந்த ஒன்றாலே சுட்டிக்

காட்ட முயலுகிறோம். கடவுளையும் அப்படித்தானே செய்கிறோம். கவிதையையும் அப்படித்தான் செய்கிறோம்.

இந்தக் கவிதைத் தொகுதியில் பல கவிதைகள் தாகுரின் கீதாஞ்சலியைப் படிப்பதைப் போன்ற உணர்வை நமக்கு ஏற்படுத்திவிடுகின்றன. கைக்கு அகப்பட்ட ஒன்றைக் கவிதையென்னும் கயிற்றாலே கட்டி நம் கண்முன்னே காட்டிவிடுகிறார் கவிஞர்:

**"கவிதைக் குள்ள காந்த சக்தியும்**
**அப்படித்தான் அண்ணே**
**கடவுளோடு கட்டிப் போடும்**
**மூலக் கயிறண்ணே"**

என்கிறார். அது என்ன மூலக் கயிறு. அது கயிறில்லாத கயிறு. ஆதி மூலமே என்று அன்று கஜேந்திரன் ஆதிமூலத்தைக் கட்டியிழுத்ததே, அந்தப் பக்திக் கயிறு.

இந்தக் கவிதைத் தொகுதியிலுள்ள கவிதைகளை ஆக்கியது யார் க. இரவியா? அல்லது அவர் மூலம் தந்தது அந்தக் கற்பனைக் காரியா? எனக்குத் தருகிறாள். எனக்குத் தந்ததை அவள் சுவைக்கிறாள் என்கிறார் கவிஞர்

**யாரிவள்?..... என்னை**
**அருந்தி அருந்தி வளர்பவளா**
**என்னுள் தினமும் மலர்பவளா?**

அப்படி மலர்கிற அவள் யார்? இன்ன உருவம் என்று அடக்கிவிடமுடியுமா? இல்லை எல்லா உருவும் அவளாகவே இருக்கிறாளா? கவிஞர் சொல்கிறார்

**யாருருவும் உன்னுருவே**
**எப்பெயரும் உன்பெயரே**
**போகும்வழி தெரியாமல்**
**போரிடுவார் மானிடரே**
**அவரவர்க்கு அவர்வழியில் அருள்கின்ற நாயகமே**

பகவத்கீதை ஏழம் அத்தியாயத்தில் பகவான் கண்ணன் சொல்வதை இங்கே எண்ணிப்பார்க்கத் தோன்றுகிறது.

**எந்த பக்தன் எதை நம்பி**
**எந்த வடிவை வணங்கிடினும்**
**அந்த பக்தன் நம்பிக்கை ஆக்கும்**
**வடிவை ஏற்கின்றேன்.**

*(இலந்தை இராமசாமியின் மொழியாக்கம்).*

*இதைத்தான் பாரதி யாதுமாகி நின்றாய் காளி எங்கும் நீ நிறைந்தாய் என்கிறான். யாதுமாகி நிற்கிறபோது ஆணென்ன, பெண்ணென்ன, அலியென்ன, அதுவென்ன, இதுவென்ன எல்லாம் ஒன்றுதான். இப்படி எல்லாமாக விளங்கும் அந்தத் தெய்வத்தை ஆச்சர்யத்தின் உச்சமாகப் பார்க்கிறார் கவிஞர்.*

**என்னையும் உன்னையும் வாழ வைக்கும் - உல**
**கன்னையெழில் மிக ஆச்சர்யம் - உல(கு)**
**அன்னை எழில்மிக ஆச்சர்யம்**

*மகாகவி இராவீந்திரநாத் தாகுர் ஒரு பாடலில் சொல்வார்*

The song that I came to sing remains unsung to this day. I have spent my days in stringing and in unstringing my instrument.

*இங்கே கவிமாமணி இரவி சொல்கிறார்*

**எடுத்து வந்த மலர்களை நான்**
**தொடுத்து முடியவில்லை**
**ஒவ்வொன்றாக உதிர்ந்ததனாலே - என்**
**கையில் எதுவுமில்லை**

*முடியவில்லை என்பதுதான் இதில் உயிரான சொல். எடுத்து வந்த மலர்களை நான் தொடுத்து முடிக்கவில்லை என்றிருந்திருக்கலாம். மலர்களை நார்கொண்டு தொடுக்கும் போது அவற்றை நார்கொண்டு முடிபோடுவதுதான் வழக்கம். அதனாலே முடியவில்லை என்றால் முடிபோடவில்லை என்றும் அதேசமயம் இன்னும் அந்தச் செயலை முடிக்கவில்லை என்ற பொருளும் வருகிறது. அதைத்தான் தாகுரும் சொல்கிறார்*

*“பாட வந்த பாட்டை இன்னும் பாடவில்லை. குறுக்குச் சுவர்கள் என்றொரு கவிதை. அதில் கவிஞர் நமக்கு ஒரு கட்டளை இடுகிறார்*

**மனத்தில் உள்ள குறுக்குச் சுவர்களை**
**இடித்துத் தள்ளுங்கள்**
**உயிர்களெல்லாம் ஒன்றே என்ற**
**உண்மை உணருங்கள்**

*மகாகவி தாகுரின் புகழ்பெற்ற கவிதை ஒன்றில் சொல்கிறார்*

Where the mind is without fear and the head is held high; Where knowledge is free; Where the world has not been broken up into fragments by narrow domestic walls;

**எங்கே நெஞ்சில் அச்சமே இல்லையோ**
**எங்கே மக்கள் நிமிர்ந்து நிற்பரோ**
**எங்கே கல்வி கட்டிலாது ஓங்குமோ**
**எங்கே குறுகிய தன்னலச் சுவர்களால்**
**பின்னமாய் நாடு பிளந்திடவில்லையோ**
**(மொழியாக்கம் - பேராசிரியர் அ.சீ.ரா)**

*குறுகிய தன்னலச் சுவர்களை உள்ளுக்குள்ளும் இடித்துத் தள்ளுங்கள் என்கிறார் கவிஞர் இரவி*

*இந்தத் தொகுதியில் எனக்கு மிகவும் பிடித்த கவிதை*

**(தாழிசையோ, ஹைக்கூவோ**
**யாமறியோம் பராபரமே)**
**மக்கும் குப்பை மக்காத குப்பை**
**பிரித்துப் போட வேண்டுமாமே**
**என்னையும் அப்படித் தான்**

*இது புறத்துக்கும் அகத்துக்கும் பொருந்தும். உண்ணுகிற உணவில் மக்கும் குப்பையும் மக்காத குப்பையும் ஒன்றின் இடத்தை மற்றொன்று பிடித்துக்கொண்டு எத்தனை நோய்களைக் கொடுத்துவிடுகின்றன.*

*சரி, அதை விடுங்கள், மனத்தின் கிண்ணத்தில் கணத்துக்குக் கணம் எத்தனை குப்பைகளை ஒன்றுக்கு மேல் ஒன்றாகக் கொட்டிக் கொண்டிருகிறோம். பிரிக்கப்படாமல்*

அவை அழுகிக் கிடக்கின்றனவே. இன்றைய தகவல் தாக்க உலகில் எதை எடுப்பது எதை விடுப்பது என்று தெரியாமல் தகவல்கள் ஊடகங்களாலும் காது வழியும் கண் வழியும் வந்து நம்மைத் தாக்கிக் கொண்டிருக்கிறன. உண்மையைச் சொல்லப்போனால் அவை நம்மைப் பைத்தியமாக அடித்துக் கொண்டிருக்கின்றன. நம் சுயச் சிந்தனையை அவை சுரண்டிக் கொண்டிருக்கின்றன. நமக்குள் குவிந்து கொண்டிருக்கும் மக்கிய குப்பைகளையும் மக்காத குப்பைகளையும் அவை நம்மைப் பாதிக்கத் தொடங்குமுன் அகற்றிவிடுவது அவசியம், அவசரம். ஆனால் எப்படிப் பிரிப்பது? அதுதானே சிக்கல்!

பாரதி சொன்னான்: ஒருவன் இலக்கணத்தில் புலவனாக இருந்து அவன் இரக்க உணர்வு இல்லாதவனாக இருந்தால் கவிஞனாகிவிட முடியாது.

பேராசிரியர் அ.சீ.ரா. சொன்னார்: அழகு கற்பனை, இலக்கணப் புலமை, இவற்றிற்கும் மேலாகக் கவிஞனுக்கு அவசியமான ஒன்று பரிவு.

தெய்வீகம் என்ற இராஜ பாட்டையில் சென்று கொண்டிருக்கும் கவிமாமணி இரவி பக்கத்தில் பார்க்கிறார். அங்கே கண்முன் பல அவலங்கள் விரிகின்றன. உடனேயே அவரது பார்வை மாறுகிறது. “இதோ கண்முன்னே அரசியல் அவலங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும் போது இன்னும் எத்தனை நாளைக்குத் தான் இயற்கையைப் பாடிக்கொண்டிருக்கிறது. சமுதாயச் சீர்கேட்டையும் பாடும் கோபம் வேண்டும். வரலாற்றில் பங்கேற்க வா என்று அழைக்கிறார். இந்த உணர்ச்சி எல்லாக் கவிஞர்களுக்கும் அவ்வப்போது நிகழ்வதுதான். தூங்கிக் கொண்டிருக்கிற சிங்கம் சற்றே சிலிர்த்துக் கர்ச்சித்து விட்டுப் பின்னர் தூங்கச் சென்று விடுவது போல சிலர் தற்காலிக சிலிர்ப்புக் கொள்ளுவார்கள். ஆனால் கவிமாமணி இரவி அவர்களின் சிலிர்ப்பைச் சமுதாய அக்கறையின் வெளிப்பாடாகத்தான் பார்க்கிறேன்

**வரலாற்றில் பங்கேற்க நான் அழைக்கிறேன் - ஏன்**
**வரமாட்டேன் என்றுநீ அடம்பிடிக்கிறாய் - உன்**
**வரவாலே வரலாறு திசைமாறுமா - ஒரு**

வரலாறு புதிதாக உருவாகுமா
(வரலாற்றில்)

வானம் பூமி அருவி குருவி அத்தனையும் பாடி
வண்ணநிலா பாடிக் கொஞ்சம் காதலையும் பாடி
நானும் நீயும் விளையாடிக் களித்ததெல்லாம் போதும்
- இனி

நாடகத்தின் உச்சகட்டம் கோபஅலை வீசும்
(வரலாற்றில்)

*இங்கே*

ரத்தவெறி கொண்டலையும் பேய்கள் எத்தனை - கொடும்
ராட்சஸர்கள் வஞ்சகர்கள் இன்னும் எத்தனை
ஏழைகளை ஏய்த்து வாழும் எத்தர் எத்தனை
இவர்நடுவே எதற்கின்னும் ஆலாபனை
(வரலாற்றில்)

இயற்கையையே பாடிக்கொண்டு நாமும் வாழ்வதா -
இல்லை
இலட்சியத்தை மீட்கப்போர்க் கோலம் கொள்வதா
செயல்வீரம் இல்லாமல் சோரம் போவதா - என்ன
செய்யவேண்டும் பாடத்தை நான் சொல்வதா
உன்னுடைய மௌனத்தை நீகலைத்திடு - என்
உணர்ச்சியிலே தீமூட்டித் தழல்வளர்த்திடு
(வரலாற்றில்)

“கவிஞன் கொதித்தால் தமிழ் கொதிக்கும்
அவன் கண்வலித்தால் அங்கே பண்ணொலிக்கும்”

(இலந்தை இராமசாமி)

*பாரதியிடம் அதீதப் பற்றுக் கொண்டவர் கவிஞர். அப்படிப்பட்டவர் பாரதியைத் தீண்டத்தகாதவன் அவனை ஒதுக்கிவிடுங்கள் என்கிறார். ஏனப்படி?*

ஒதுக்கி விடுங்கள் அவனை, அவன் தீண்டத் தகாதவன்
தீண்டினால் தீட்டில்லை தீப்பற்றிக் கொள்ளும்
தன்னலமும் ஆணவமும் எரியுண்டு போகும்

ஓ, அப்படியா என்று நாம் கேட்டால் அவனை மட்டுமில்லை அவனுக்கே ஆட்பட்டிருக்கும் என்னையும் ஒதுக்கிவிடுங்கள் என்கிறார். பாரதியைக் கொள்ளிவாய்ப் பிசாசு என்று சொல்லுமளவுக்குப் போய்விடுகிறார்.

**“மீசை முறுக்கு, மிதமிஞ்சிய மிடுக்கு,**
**கருங்கோட்டுக் கீழ்பஞ்ச கச்சம், உள்நுழைந்தால்**
**நெஞ்சில் கனல்மணக்கும் பூக்கள், நினைவெல்லாம்**
**செஞ்சுடராய் நின்றெரியும் தீபம்; இதற்கு மேல்**
**ஒருகோடி சூரியர்கள் ஊற்றெடுக்கும் உண்மையொளி!**
**வாயைத் திறந்தால் வரும்நெருப்பு வார்த்தைகள்!**
**தள்ளியே நில்லுங்கள் - அவன்**
**கொள்ளிவாய்ப் பிசாசு!**
**அச்சோஅப் பேயனுக்கே ஆளான காரணத்தால்**
**என்னையும் நீங்கள் ஒதுக்கி விடுங்கள் - இங்(கு)**
**எனக்கவனே எல்லாம் இனி.**

பாரதி பற்றி நான் இப்படி எழுதியுள்ளேன்: அவன்,

**“நீரில் மிதக்கும் நெருப்பு - நம்**
**நெஞ்சில் என்றும் இருப்பு**
**சாரத் தமிழின் விரிப்பு - கவிச்**
**சாட்டை அடியின் உரிப்பு”** **(இலந்தை இராமசாமி)**

நாராயணீயத்தில் 93 வது தசகத்தில் தனக்குக் குருமார்களாக இருபத்து நான்கு குருமார்களை நாராயண பட்டத்திரி பட்டியலிடுகிறார் தேனீ, சந்திரன், குருவி, கன்னிப் பெண்ணின் ஒற்றை வளையல் எனப் பலவற்றைப் பட்டியலிடுகிறார். ஒவ்வொன்றிலிருந்தும் தான் என்ன கற்றுக்கொள்ள முடிகிறது என்று விளக்குகிறார். அதே போல கவிமாமணி இரவி அவர்களும் தனக்குக் குருமார்கள் யார் என்பதை ஒரு பாடலில் குறிப்பிடுகிறார்

**மரம்செடி கொடிகள் விலங்குகள் பறவைகள்**
**மனிதர்கள் எல்லாம் ஓருயிரே**

**கடலும் மலையும் கோள்களும் வானமும்**
**யாவுமொன் றின்பல வடிவங்களே**
**ஹரியும் ஹரனும் பரம பிதாவும்**
**அல்லாவும் அதன் நாமங்களே**
**அகவிழி திறக்க உதவுகின்ற**
**அனைவருமே குருநாதர்களே (ஒருநாதனே)**

*முத்தாய்ப்பாக இந்தப் புத்தகத்தின் தலைப்பைப் பற்றி ஒன்று சொல்லவேண்டும். தலைப்பு ஓர் அழகான முரண்.*

*'தேன்துளிகளும் தீப்பொறிகளும்'.– முரண் என்பது ஒன்றுக்கொன்று எதிர்ப்பட்டதாகத்தான் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஒன்றில்லாமல் இன்னொன்று இல்லை என்று சொல்லப்படும் முரண்களும் உண்டு.*

*இருட்டும் ஒளியும் அப்படிப்பட்டது. இருட்டிலிருந்து ஒளியை எடுத்துக்கொண்டே இருந்தாலும் அதில் இன்னும் ஒளி இருக்கும். அதைப்போலவே ஒளியிலிருந்து இருட்டை எடுத்துக் கொண்டே இருந்தாலும் அதில் இன்னும் இருட்டு இருந்துகொண்டே இருக்கும்*

*முரண்கள் ஒன்றுக்கொன்று இணையாகவும் துணையாகவும் இயங்கும். இந்தப் புத்தகத்தின் தலைப்பும் அப்படித்தான் இயங்குகிறது. அதைத்தான் கவிஞர் சொல்கிறார்*

**பனிபொழியும் இளங்காலை வரவழைக்கும் கவிதை**
**பரவசத்தில் உதிக்கின்ற பாடலொரு கவிதை**
**கனிரசத்தைக் கோப்பையிலே மொண்டுவரும் கவிதை**
**கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் கண்டுவரும் கவிதை**
**தனிமையிலே பாடங்கள் கற்பிக்கும் கவிதை**
**தர்க்கத்தின் அணைமீறிப் பறக்குமொரு கவிதை**
**மனிதனிடம் மகத்துவத்தை விதைக்குமொரு கவிதை**
**மன்றாடி நின்றாலும் வரமறுக்கும் கவிதை**
***அட!***

**தேனோ தீயோ இது வளர்கின்ற நெருப்பு**
**நானோ நீயோ இதற்கில்லை பொறுப்பு**

*கவிமாமணி இரவி எழுதியுள்ள வரிகள்*

**எழுதிக் கொண்டே இருக்கிறேன்**
**என்னை நானே**
**எழுதிக் கொண்டே இருக்கிறேன்**

*அவர்*

**எழுதட்டும் எழுதிக்கொண்டே இருக்கட்டும்**
**எழுதியதைக்**
**கொடுக்கட்டும், கொடுத்துக் கொண்டே இருக்கட்டும்.**

*அன்புடன்*

**இலந்தை சு இராமசாமி**
*2, 29வது தெரு*
*தில்லை கங்கா நகர்,*
*சென்னை– 600061*



# நுட்பமான புலமை

பேராசிரியர் முனிரா
**ஆங்கிலத்துறை,**
**அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகம்.**

உத்திரப் பிரதேசத்திலுள்ள அலீகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருபவர் முனைவர் முனிரா. ஆறு மொழிகளில் புலமைபெற்ற இவர் ஹிந்தி, காஷ்மீரி, குஜராத்தி, தமிழ் மொழிகளிலிருந்து இலக்கியப் படைப்புகளை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்துள்ளார். மொழிபெயர்ப்பு மற்றும் அமெரிக்க இலக்கியம் சார்ந்து ஆய்வுகளை மேற்கொண்டுவரும் முனிரா அவர்கள் இளங்கலை, முதுகலை மாணவர்களுக்கு ஆங்கிலமொழியையும் இலக்கியத்தையும் கற்பித்து வருகிறார்.

---

*இந்திய ஆங்கிலக் கவிதைகள் குறித்துக் கருத்தரங்கம் ஒன்றை அலீகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் நடத்த திட்டமிட்டுக்கொண்டிருந்தபோது கவிஞர் வானவில் கே. ரவியின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. இவரைத் தனித்துவமான திறமையுடன் பிறந்தவராகக் குறிப்பிடலாம். மலையிலிருந்து பாய்ந்தோடிவரும் நீரோடைபோல அவரின் பேனாவிலிருந்து கவிதை வந்துவிழுவதைப் பார்த்தபோது எனக்கு இப்படிக் கூறவது பொருத்தமாக இருக்குமெனத் தோன்றியது. இவரின்* The Messiah, The Ballad of the Warrior Girl: Kuyili and Prahalad *ஆகிய கவிதைத் தொகுப்புகளை சிலநாட்களுக்குமுன் வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. வலிமை வாய்ந்த கவிதை ஊடகத்தின் வழியாக இவர் உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிற முறை இருந்தது.*

*கவித்துவமானதாக இவரின் நுட்பமானபுலமை என்னை ஆட்கொண்டுவிட்டது என்று கூறுவேன்.*

பயன்மிகுசிந்தனையை உரக்கச்சொல்லும் தத்துவக்கவிஞர்போல இவர் வெளிப்படுகிறார். ஆழமான தத்துவக் கருத்துகளை எளிமையான, தெளிவான மொழியில் படைக்கும் ஆற்றலுடையவராக இருக்கிறார். இவருடைய சின்னச்சின்ன கவிதைகள் காவியங்களைப்போல மிளிர்கின்றன. கவிதைகளை மலர்ச்சியுடன், உயிர்ப்புடன் வெளிப்படுத்தும் ஆற்றலும் இவருக்கு வாய்த்திருக்கிறது. இவருடைய ஆங்கிலக் கவிதைகள் இவரின் தமிழ்க் கவிதைகள்போலவே சொல்திறம் மிக்கன.

ஐம்பது கவிதைகள் அடங்கிய "தேன்துளிகளும் தீப்பொறிகளும்" என்ற கவிதைத் தொகுப்பு வானவில் கே.ரவியின் குறிப்பிடத்தக்க சிறப்பான படைப்பு. தெய்வம் இவளா...! என்ற முதல் கவிதையில் சக்தியை அழைத்துப் போற்றுகிறார். மக்கும் குப்பை மக்காத குப்பை/பிரித்துப் போட வேண்டுமாமே/ என்னையும் அப்படித் தான்... (தாழிசையோ, ஹைக்கூவோ யாமறியோம் பராபரமே) என்ற இவரின் ஹைக்கூ நம்மைச் சிந்திக்கவும் செயல்படவும் தூண்டுகிறது. கவிஞர் தமிழின் மீதுகொண்டுள்ள பேரன்பை, பெருமதிப்பை அவரின் "அன்னைத் தமிழே" என்ற கவிதையின்வழி அறிந்துகொள்ளலாம். எதிரில் வந்து நின்று விட்டாய்/எப்படி வணங்குவது கையில்/ஏந்தி வந்த தீபத்தை நான்/எங்கே வைப்பது.... எப்படி வணங்குவது என்ற தலைப்பிலான இந்தக் கவிதை வழிபாடு குறித்தும் பிரார்த்தனை பற்றியும் நம்மைக் கவனம்கொள்ளச் செய்கிறது.

குறிப்பிடத்தக்க அளவில் கவிதைத் தொகுப்புகளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டுள்ள வானவில் கே.ரவியின் கவிதைகள் இதயங்களைவருடிச் சிந்திக்கவும் செயல்படவும் நம்மை இட்டுச்செல்லும் ஆற்றொழுக்கானவை. இவைதான் இவருடைய பலமாக இருக்கின்றன.

**வாழ்த்துகள்**

*முனைவர் முனிரா*
*ஆங்கிலத்துறைப் பேராசிரியர்*
*அலீகர் முஸ்லிம் பல்கலைக்கழகம்*

## 1. தெய்வம் இவளா...!

நட்சத்ர மாலை புரளும் தோள்கள்
நயனங்களாய்ப் பல்லாயிரம் கோள்கள்
நீலச் சேலை நிலவு முகம்
பெருமழை பொழியும் கருணை மனம்
யாரிவள் மோகினியோ - என்
வானம் ஆனவளோ - இங்கு
நானே தானவளோ

ஒவ்வொரு சொல்லிலும் ஒரு சுடரேற்றி
வெவ்வேறாக வடிவங்கள் மாற்றி
ஆயிரம் பெயரில் அழைத்துப் போற்றி
ஆலத்தி ஏந்திய பின்னும் - கண்ணில்
அகப்படாமல் இன்னும்
போக்குக் காட்டிக் கொண்டே யிருக்கும்
புதிரா பெருவெளியா - என்றும்
உதிரா மலர்ச்சரமா

இரவகலாத வைகறைப் போதில்
இதயத்துள் மிக நெருங்கி வந்து
குழந்தை போலமர்ந்து கொண்டு - 'ஊம்'
கொட்டிக் கொண்டே கவிதை கேட்கும்
சுட்டிப் பெண்ணா சுந்தரியா

மேகப் போர்வை மெல்ல நீக்கி
எட்டிப் பார்க்கும் எழிலோவியமா - என்னை
அருந்தி அருந்தி வளர்பவளா
என்னுள் தினமும் மலர்பவளா
அட
தேவி, சக்தி, தெய்வம், இவளா!

(நட்சத்ர மாலை)

❁✿❁

*08.03.2019*

## 2. மூலக் கயிறண்ணே...!

(பாடலைக் கேட்க Youtube Channel: Vanail K.Ravi)

ஓடைக்குள்ளே தெரிந்த நிலவை
உள்ளங்கையில் அள்ளி எடுத்தேன்
அள்ளிய நீரிலும் அதே நிலா
அப்படியே அதைப் பருகி முடித்தேன்
பருகிய பிறகும் அதே நிலா
பார்த்தேன் ஓடையிலே
மெல்ல நிமிர்ந்தேன் அடடா அங்கும்
அது தான் வான மேடையிலே
அண்ணே அண்ணே கவிதைகளும்
அந்த நிலாப்போலே
அள்ளி அள்ளிப் பருகினாலும்
குறையா ததனாலே

சூரிய வெப்பம் தாங்காமல்
சுழலும் பூமியைப் பார்
இரவும் பகலும் மாறி மாறி
நடத்தும் நாடகம் பார்
சூரியப் பிழம்பில் இருந்து பிரிந்து
வந்ததுதானே புவிக்கோளம்!
பிரிந்து வந்த பிறகும் - பிடி
தளரவில்லையே என்ன காரணம்?
கவிதைக்குள்ள காந்த சக்தியும்

அப்படித்தான் அண்ணே
கடவுளோடு கட்டிப் போடும்
மூலக் கயிறண்ணே

யாதும் ஊரே என்ற பிரகடனம்
நெஞ்சில் அலை மோத
யாயும் யாயும் யாரானாலும்
காதல் பூ மலர
"உண்டால் அம்ம" மந்திரத்தில்
புலனைந்தும் ஒடுங்க
யாதனின் யாதனின் நீங்கிய பிறகே
உண்மையும் விளங்க
ஓதுவதெல்லாம் உயிருக் குத்தான்
ஊதியமாம் அண்ணே
ஒவ்வொரு கணமும் கவிதைக்குள்ளே
உயிர்த்திடலாம் அண்ணே

❀✿❀

*05–05–2021*

## 3. ஒருதுளிக் கண்ணீர்!

“வறுமையைப் பற்றிப் பாடிக் கொண்டே
வாழ்க்கையைக் கடத்தும் புலவனா நான் - என்
பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு
கருவூலத்தின் கதவைத் திற - உன்
பொக்கிஷப் பெட்டி எங்கே எங்கே
பூட்டியிருந்தால் பூட்டை உடைத்துப்
பொக்கிஷத்தை எடுப்பேன்
காட்டி விடு உன் கருவூலத்தை”

கர்ஜித்தேன் பதில் மெல்ல வந்தது
"காட்டுகிறேன் காட்டிவிட்டால்
கதவை உடைக்கும் கருவி உண்டா
கதவை உடைத்துச் சென்றாலும்
பூட்டை உடைக்கும் உளியுண்டா
பூட்டை உடைத்தாலும் - உள்ளே
புகுந்து செல்லத் துணிவுண்டா"

“உண்டு உண்டு சீக்கிரம் காட்டு”
- உத்தரவிடுகின்றேன்
என்
உடலைத் தொட்டுக் காட்டுகிறான்
உடைக்க வேண்டிய கதவென்று

என்
உள்ளம் தொட்டுப் பேசுகிறான்
அறிவுப் பூட்டை உடையென்று
கருவிகள் எல்லாம் நழுவி விழுந்தன
ஒரு துளிக் கண்ணீர் உடைத்தது கதவை - இன்
னொரு துளிக் கண்ணீர் திறந்தது பூட்டை - இன்னும்
உள்ளே நுழையத் துணிவில்லையே

❀✿❀

*5–06–2021*

## 4. பிரித்துப் போடு

(தாழிசையோ, ஹைக்கூவோ
யாமறியோம் பராபரமே)

மக்கும் குப்பை மக்காத குப்பை
பிரித்துப் போட வேண்டுமாமே
என்னையும் அப்படித் தான்

❀✿❀

*18–06–2021*

## 5. வாழ்க பாரதம்

வாழ்க பாரதம் என்று முழுங்குவோம்
இனிய தமிழிலே உணர்ச்சி பொங்குவோம்
வெல்க பாரதம் என்று கூவுவோம்
தமிழில் சொல்லித் தலைநிமிர்த்துவோம்

வந்தே மாதரம் என்ற மந்திரம்
வாங்கித் தந்தது நம் சுதந்திரம்
ஜெய்ஹிந்த் என்ற கர்ஜனையே - நம்
தாய் நாட்டுக்கோர் அர்ச்சனையே

செப்பு மொழிகள் எத்தனை ஆயினும்
சிந்தை ஒன்றுடையோம்
அற்பத் தனத்துக் கடிமை யாகி
மீண்டும் நாம் உடையோம்

ஒன்று பாரதம் என்பதை - மனம்
ஒன்றி வணங்கிடுவோம்
ஒன்றியம் என்பதன் பொருளிதுவே
உண்மை யறிந்திடுவோம்
இந்து, முஸ்லீம், கிருத்துவர்கள்

என்பதெல்லாம் பிறகே
இந்தியர் என்பதே முதலடையாளம்
உணரட்டும் உலகே

❀✿❀

*26.06.2021*

## 6. தெருக்களின் பேச்சு

ஒரு முனையில் சந்தித்துக் கொண்ட
இரண்டு தெருக்கள் பேசிக்கொண்டன - ஆம்
இரண்டு தெருக்கள் பேசிக்கொண்டன:
"தெருமுனை என்று சொல்கிறார்களே
அப்படி எதுவும் உண்டா?
நாம் ஒன்றா, இரண்டா?
நீயே வளைந்து நான் உருவானேனா?
நான் வளைந்து நீ உருவானாயா?"
பேருந்துச் சத்தத்தில்
பேச்சமுங்கிப் போனது;
பிறகு தொடர்ந்தது:
"நம்மை மிதித்து நடக்கும் மனிதரையும் நாம்
மதிப்புடன்தானே நடத்துகிறோம்
அவர்கள் வெளிச்சத்துக்கும் அவர்கள்
உரையாடலுக்கும்
அவ்வப்போது நம்மை ஏன்
வெட்டித் தோண்டி ரணம் செய்கிறார்கள்?
சரி, சரி
நாய்களே நம் தோழர்கள், போ!"
தெருக்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டே
வீடு வந்து சேர்ந்தேன்
பக்கத்து வீட்டில் குடிகாரக் கணவன் தன்
மனைவியை அடித்துத் துவைக்க,

மனைவியும் குழந்தைகளும் அலறிக் கதற
அக்கம் பக்கத்தில் இருப்போர் சமாதானம்
செய்யப்போய்
சச்சரவு சண்டையாகிக் கலவரமே வெடிக்க ....
அந்தச் சத்தத்தில்
தெருக்களின் பேச்சு மௌனமாச்சு

❀✿❀

*28.06.2021*

## 7. கலைந்து போனது கவிதையின் மௌனம்

என்
மனத்தை விட்டு வெளியே வந்தாள்
காலாற நடப்பதற்கு
வீட்டுத் தோட்டத்தை நோட்டம் விட்டாள்
விகசித்த படியே மஞ்சள் விரல்களை
விரித்துச் சிரித்து வரவேற்றது - ஒரு
சூரியகாந்திப்பூ

“என்னை ஏன் அழைக்கிறாய்?
நான் என்ன வண்டா?” என்றாள்
“நீயில்லை உன் நீல விழிகள்!”

பேசியது பூவா, மனமா? - ஒரு
காற்று வீச்சில்
கலைந்து போனது கவிதையின் மௌனம்

*17–10–2021*

# 8. பல பொழுதுகள் விடியும்

வானம் பொழியப் போகிறது
வந்து பார்!
வறண்ட நிலத்தில் ஒரு பறவை
கானம் பொழியப் போகிறது
நின்று கேள்!
மனத்தில் இருக்கும் சுமையெல்லாம் - ஒரு
கணத்தில் உதிர்ந்து போகும்
அழகும், இசையும், கவிதையுமாய் - ஓர்
ஆனந்தம் பிறக்கும்

காதுக்கருகே சலசலக்கும் நதி
காலுக்கு மட்டும் காத தூரமாம்
வீசி நட, விரைவில் வரும்!
காலம் உனக்குக் காத்திருக்கும்!

தட்டாம் பூச்சிச் சிறகுகளுக்கும்
வண்ணம் சேர்க்கும் காலைப் பொழுது
பட்டாம் பூச்சியாக மாறிப்போய்ப்
பறக்கட்டுமே உன் மனது

மரத்தைப் பிரிந்து மண்ணில் உதிரும்
சருகைப் பார்த்துக் கொண்டே இரு - அது
மெல்ல அசைந்து கீழே இறங்கும் - அந்த
நடனத்துக்கொரு பாட்டுப் படி
அது போல் நீயும் உதிர முடியும்
அதுவரைக்கும் பல பொழுதுகள் விடியும்

❀✿❀

*24-10-2021*

## 9. எத்தனை வீணைகள் மீட்டுகிறாய்...!

பொன்னொளிக் கரங்களால் பூமியி லேநீ
எத்தனை வீணைகள் மீட்டுகிறாய்
பூவிலும் புல்லிலும் புனலிலும் தோய்ந்து
புதுப்புது வடிவங்கள் காட்டுகிறாய்
என்மனத் திலுமொரு தீபத்தை ஏற்றி
இசையுடனே ஒளி கூட்டுகிறாய்
இயற்கையென் பார்சிலர் இறையெனச் சொல்வார்
எனக்கு நீ தோழி சகோதரி தாய்!

சக்தியென் றேயுனைச் சரணடைவதையே
பக்தியென் பார்சில பண்டிதர்கள்
சாக்தம் என்பார் ஒரு சன்னிதி எழுப்பிச்
சிலையாக நிற்கவைப்பார் - வடிவில்
அக்கினியாயுனை வணங்குவார் கோடி
அர்ச்சனைகளும் பொழிவார் எனக்கோ
அன்னை நீ அன்பு நீ ஆணவத் தின் வேர்
அழிக்கின்ற உருக்கமும் உன்னருளே

கவலைக்கு மாற்றுநீ கவிதைகள் சுரக்கும்
ஊற்றுநீ நெஞ்சிலுற் சாகமும் நீ

கற்பனை இழையிலே சொற்புனை கின்ற
கோலம்நீ பேரெழிற் கொள்ளையும் நீ
கணங்களாய் விரைகிற காலம்நீ இந்த
ஞாலமும் ஞாலத்தின் மூலமும் நீ
கருணையே காவலே காட்சியே மூச்சுக்
காற்றின் ஓங்காரமே உயிர்நிலையே!

❀✿❀

*31–10–2021*

## 10. சொல் பூத்த வனத்தில்...!

சொல் பூத்த வனத்தில் நான் சொக்கி நின்றேன்
சுகமான மணம் வீசும் கனவு; நெஞ்சுக்(கு)
உள்பூத்த கனலாகக் கனன்றிருக்க
ஒளி நுழையத் தடுமாறும் சோலைக்குள்ளே
கல் பூத்த மலராகக் கவிதை ஒன்று
கனிவோடு வரவேற்க வானிறங்கிப்
புல் பூத்த துளியெல்லாம் சிந்துகின்ற
புன்னகையில் பதம் வைத்து நடந்து சென்றேன்

நூலிடையாள் கூந்தலிலே நிறைந்திருந்த
கால்களையா அனிச்சப்பூப் பறை கேட்கின்றேன்
காலணிந்த சிலம்பைத் தன் கையில் ஏந்தி
வழக்குரைத்த கண்ணகியின் கதை கேட்கின்றேன்
நால்வரையும் தாண்டி ஐந்தாறேழாகி
நடந்தவனின் பாத நிழல் தரிசிக்கின்றேன்
வேல்முனையில் தீப்பிழம்புச் சொல்லெடுத்தே
அச்சப் பேய் வீழ்த்தியவன் குரல் கேட்கின்றேன்

வாழ்க்கையெனும் மேடையிலே நாடகங்கள்
காட்டியவன் வார்த்தைகளைக் கடந்து சென்றேன்
ஆழ்மனத்தில் தங்கமலர்க் கூட்டத்துக்கோர்
ஆசனம் அளித்தவனைக் கண்டு சென்றேன்

வேய்ங்குழலும் தானாகி வாசிப்போனுக்(கு)
ஏங்கியவன் தாபத்தை ஏந்திக் கொண்டேன்
ஓய்வின்றி நடந்ததனால் களைப்புத் தீர
ஓரிடத்தில் விழி மூடி அமர்ந்து கொண்டேன்

மெல்லியபூங் காற்றாகத் தழுவிக் கொண்டாள்
மெய்மறந்தேன் நானென்ற பொய்மறந்தேன்
சொல்லிய சொல் ஒவ்வொன்றும் தீபமாகச்
சுடர் கூட்டும் வானத்தை விரியச் செய்தாள்
எல்லாமே எனக்குள், அதில் நானே எல்லாம்
என்பதையும் காட்டிவிட்டாள் இனிப்பறந்து
செல்வதற்கோர் இடமுண்டோ சிறகிழந்தேன்
எல்லைகளே இல்லாமல் விரிகின்றேனே

❀✿❀

*06–11–2021*

## 11. காதலைப் பாடுகிறேன்

(பாடலைக் கேட்க Youtube Channel: Vanail K.Ravi)

காதலைப் பாடுகிறேன் - நான்
கடவுளைத் தேடுகிறேன்
காதலைப் பாடுகிறேன் - அதில்
கடவுளைத் தேடுகிறேன்

ஆயிரம் பாடல்கள் பாடிய பிறகும்
அனல்புனல் என்று நீராடிய பிறகும்
ஓய்வறியாமல் ஓடிய பிறகும்
ஒவ்வொரு கணமும் பாடுகிறேன்

காதலைப் பாடுகிறேன் - நான்
கடவுளைத் தேடுகிறேன்
காதலைப் பாடுகிறேன் - அதில்
கடவுளைத் தேடுகிறேன்

மலரிதழில் சிறு பனித்துளியாய் - பனித்
துளியில் விரியும் பேரொளியாய்ப்
புலரும் புதிய வான்வெளியாய்ப்
புதுப்புது பாடல் பாடுகிறேன் - உள்
புகுந்து சிலிர்க்கும் காற்றினிலே - பூ
மாலை புனைந்து சூடுகிறேன்

காதலைப் பாடுகிறேன் - நான்
கடவுளைத் தேடுகிறேன்
காதலைப் பாடுகிறேன் - அதில்
கடவுளைத் தேடுகிறேன்

கோயில் மணியின் ஓங்காரமும்
குலவும் வண்டின் ரீங்காரமும்
கடலலைபாயும் ஆங்காரமும்
கவிதைகளாகப் பாடுகிறேன்
கனவுக்கெல்லாம் ஒளிவடிவம் இழைத்துக்
கற்பனை நாடகம் ஆடுகிறேன் - அது
கலையும் என்றாலும் பாடுகிறேன்

காதலைப் பாடுகிறேன் - நான்
கடவுளைத் தேடுகிறேன்
காதலைப் பாடுகிறேன் - அதில்
கடவுளைத் தேடுகிறேன்

*18-12-2021*

## 12. நதியின் அலைகளில்

நதியின் அலைகளில் - அவள்
நடந்து செல்கிறாள்
கவியும் முகில்களை - அவள்
கடந்து செல்கிறாள்

புதிய புதிய ஆடைகள்
புனைந்து கொள்கிறாள்
புலப்படாத போதும் நெஞ்சில்
புன்னகைக்கிறாள்
(நதியின் அலைகளில்)

ஒளியும் இருளு மாக மாறி
உருவெடுக்கிறாள்
துளித்துளியாய்ச் சிதறிச் சிதறி
முழுமை அடைகிறாள்
களிப்பு, துயரம், கனவு, நினைவு,
கலந்து சுழலும் பெரிய உலகு
படைத்து ரசிக்கிறாள்
கணங்கள் என்ற குமிழ்களை
உடைத்து மகிழ்கிறாள்
(நதியின் அலைகளில்)

❀✿❀

*24.12.2021*

## 13. திசையெங்கும் வாசல்களாம்

ஓருருவில் நீயடங்க
மாட்டாயிவ் வுலகமெனும்
பேருருவைக் கடந்தும் நீ
பேரொளியாய் விரிகின்றாய்
யாருருவும் உன்னுருவே
எப்பெயரும் உன்பெயரே
போகும்வழி தெரியாமல்
போரிடுவார் மானிடரே

அவரவர்க்கு அவர்வழியில்
அருள்கின்ற நாயகனே
அழைக்கின்ற தருணத்தில்
அரவணைக்கும் நாயகியே
சுவரொன்று சித்திரங்கள்
பலவரைய ஏதுதடை
சுவடின்றி விரிகின்ற
வெட்டவெளிக் கென்னதிரை

கடலுக்குள் கலந்தபின் நதியென்ன ஆயிற்று
கதிரொளியில் பனித்துளியும்
காணாமல் போயிற்று
உடலுக்குள் இருக்கும் வரை
ஒரு கோடிப் பூசல்களாம்
உடல்கடக்கத் துணிந்தார்க்கோ
திசையெங்கும் வாசல்களாம்

*31–12–2021*

## 14. நீ தூவிய விதைகள்

(பாடலைக் கேட்க Youtube Channel: Vanail K.Ravi)

நீ
தூவிய விதைகள்
காவிய விதைகள் - நெடுந்
தொலைவிலும் ஒளி தரும் விண்மீன்கள் - நீ
தூவிய விதைகள்
நீ
தோட்டக்காரியா
ஆட்டக்காரியா
தோட்டத்தில் உலவும் சுந்தரியா
நீ
தூவிய விதைகள்

எத்தனை ஆடைகள் உடுத்துகிறாய் - நீ
என்னென்ன நாடகம்
நடத்துகிறாய்
விதவிதமாகக் கனவுகள்
நெய்தென்னை
உறங்கவிடாமல் படுத்துகிறாய்
நீ
பாட்டுக்காரியா
பாசாங்குக் காரியா
பாசாங்குசக்காரியா
நீ
தூவிய விதைகள்

உன்
கூடையில் முத்துகள் எத்தனையோ - அதைக்
கொட்டிக் கவிழ்ப்பதும்
பித்தில்லையோ
நீ
பித்தனின் காதலியோ - கரும்
பேயுருவோ - இல்லை
தாய்மனமோ
நீ
தூவிய விதைகள்

பல
வேடத்தில் நீயே தோன்றுகிறாய் - மன
ஓடத்திலும் நீ
செல்லுகிறாய் - உயிர்
மாடத்திலே - சிறு
அகல்விளக்கேற்றி
மந்திரக் கவிதைகள்
சொல்லுகிறாய்
நீ
அசரீரியா - இல்லை
அனுபவமா - என்
ஆசிரியை நீயா - என்
ஆசிரியை நீயா

நீ
தூவிய விதைகள்
காவிய விதைகள் - நெடுந்
தொலைவிலும் ஒளி தரும் விண்மீன்கள் - நெடுந்
தொலைவிலும் ஒளி தரும் விண்மீன்கள்

*18-01-2022*

## 15. காதல் இல்லை என்றால்

(பாடலைக் கேட்க Youtube Channel: Vanail K.Ravi)

காதல் இல்லை என்றால்
கவிதை இல்லை பெண்ணே
கவிதை இல்லை என்றால்
கடவுள் இல்லை அண்ணே
கடவுள் இல்லை என்றால்
எதுவும் இல்லை அண்ணே
காதல், கவிதை, கடவுள்
யாவும் ஒன்று கண்ணே

மலரின் மீது வண்டு - வந்(து)
அமர்ந்து செல்வ துண்டு
காற்றில் நிலவுப் பெண்ணின் - மேல்
ஆடை கலைவ துண்டு
இந்தக்
காதல் இல்லை என்றால்
கவிதை இல்லை பெண்ணே

உறங்கும் போதும் நெஞ்சம்
கனவு காண்ப துண்டு
கனவில் தோன்றும் காட்சி - உடனே
களவு போவ துண்டு

களவு போன பிறகும் - அது
கவிதை யாவ துண்டு
கவிதை யாவும் இங்கே - கடவுள்
சிலைகள் ஆவ துண்டு

❁ ✿ ❁

*27–01–2022*

## 16. ஆச்சர்யம்!

பூவுக்குப் பாரென்ன ஆச்சர்யம் - மண்
புழுவுக்குத் தானென்ன ஆச்சர்யம்
பொழுது புலர்வதே ஆச்சர்யம்! ஆச்சர்யம்!

வான மழைக்கென்ன ஆச்சர்யம்!
மண்ணுக்கும் மடுவுக்கும் ஆச்சர்யம்! - ஒரு
வித்து முளைப்பதே ஆச்சர்யம்!
ஆச்சர்யம்!

தேனருந்த வரும் தும்பிகளும்
- சற்றுத்
திகைத்து நிற்பதும் ஆச்சர்யம்
தேவதை போலப்புத் தாடையுடன் - ஒளித்
தேரில் வருவகிற ஆச்சர்யம்
கண்ணில் புலப்படவில்லை
குயில் - அது
கூவியழைப்பதும் ஆச்சர்யம்
என்னையும் உன்னையும் வாழ வைக்கும் - உல
கன்னையெழில் மிக ஆச்சர்யம் - உலக
அன்னை எழில்மிக ஆச்சர்யம்

*31–01–2022*

# 17. அடைக்கும் தாழ் உண்டா?

வேறொரு திரையில் வேறொரு மொழியில்
நானும் நீயும் பேசிக் கொள்ளும்
நாள்வெகு தொலைவில் இல்லை
முன்பது போலே பேசியதெல்லாம்
இன்றுநம் நினைவில் இல்லை
யாரொருவர்க்கும் ஓருடல் வாழ்க்கை
ஓருல கத்தில் நிலைத்திடும் யாக்கை
நிரந்தரம் இல்லை ஏனோ
புலிமுது கில்நாம் ஏறிய மர்ந்தோம்
விடுதலை கேட்கின் றோமே

முன்பொரு காலம் என்பதெ லாம் வெறும்
அகராதிச் சொற்கள்
அன்பெனும் வெள்ளப் பெருக்கினிலே அணை
போடும் தடைக்கற்கள்
அன்பும் காலமும் ஒன்றெனக் கண்டால்
யார்க்கும் மரணமில்லை
அன்பே சிவமதன் அனுபவத்திற்கும்
உண்டோ ஓரெல்லை?

அடைக்கும் தாழ் உண்டா என்ற
கேள்வி மிக வலிது
அடைபடாமல் மிதந்து செல்லும்
அமைதியோ எளிது
கலையத்தானே வேடம் கரை
அடையும்வரை தான் ஓடம்
கரையும் கடலும் வேறிலை என்று
கற்றுக் கொள்வது பாடம்.

*03–03–2022*

## 18. கவிஞன் ஆக்குகிறேன்

சொல்வதற்கு முன் என்னைச் சுவைக்க வேண்டும்
நண்பா
சுவைக்கச் சுவைக்கச் சுரக்கும் சொல் நான்
கொல்வதற்கு முன் என்னைக் கொஞ்ச வேண்டும்
பகைவா
குலவக் குலவக் கரையும் பனி நான்
மொழி என்று தான் நினைத்தாய் - நான்
மொழியைக் கடந்தவன் - என்னைக்
கவிதை என்றழைத்தாய் - நான்
வானாய் விரிந்தவன்

மேகங்களிலே முத்து முத்தாய்ச்
சிதறத் துடிக்கும் மழை போல்
தேகமெல்லாம் ஊடுபாவிச்
சுடர் கொடுக்கும் உயிர்போல்
மௌனத்துக்குள் வசிக்கின்றேன் - என்னை
அள்ளிக்கொள் - வெளியே
கொண்டுவந்த பகீரதன் என்(று) உன்னைச்
சொல்லிக்கொள்

சொல்வதற்கு முன் என்னைச் சுவைக்க வேண்டும்
நண்பா
சுவைக்கச் சுவைக்கச் சுரக்கும் சொல் நான்

சின்ன மொட்டு வெளிச்சம் பட்டு மெல்ல விரிவதை

முட்டைக்குள் இருந்(து) ஒருகுஞ்சு
முண்டியடித்துக் கொண்டு வருவதை - மரம்
உயர உயர அடியில் வேரும்
படர்ந்து கொண்டே செல்வதைக்
காண முயன்றால்
உனக்குள்ளே நான்
உதயமாகின்றேன் - மன
வாசல் கதவைத் திறந்துவை - உன்னைக்
கவிஞனாக்குகிறேன்

*03–04–2022*

## 19. தென்னை மரம் கேக்குது

தென்னை மரம் கேக்குது
முருங்கைமரம் கேக்குது
செம்பருத்திப் பூவெல்லாம் சிரிச்சுக்கிட்டே கேக்குது
கேக்குது கேக்குது
நான்
பாட்டுப் படிக்கணும் - அதைக்
கேட்டு ரசிக்கணும் - இந்தத்
தோட்டத்திலே கச்சேரி தினமும் நடக்கணும் - என்று
தென்னை மரம் கேக்குது
முருங்கைமரம் கேக்குது
செம்பருத்திப் பூவெல்லாம் சிரிச்சுக்கிட்டே கேக்குது
கேக்குது கேக்குது

நொச்சிப் பூவும் வழி மறிச்சு நொண்டிச்சிந்து கேக்குது
பச்சைப்புல்லும் தலையசைச்சுப் பாடச் சொல்லிக்
கேக்குது
காத்துவந்து வழிநடைக்குக் காவடிச்சிந்து கேக்குது
ஏத்தப் பாட்டு எசப்பாட்டு எல்லாப் பாட்டும் கேக்குது

தென்னை மரம் கேக்குது
முருங்கைமரம் கேக்குது
செம்பருத்திப் பூவெல்லாம் சிரிச்சுக்கிட்டே கேக்குது
கேக்குது கேக்குது
கேக்குது கேக்குது

கருப்பாயி மவகையில் மருதாணி பூசணுமா
மாரியம்மன் கோவிலுக்கு மாவெளக்கும் ஏத்தணுமா
அநியாயம் செய்பவரை தட்டிக் கேக்க வேணுமா
பசி நோவு சாவெல்லாம் பறந்தோடிப் போவணுமா

எல்லாத்துக்கும் பாட்டிருக்கு தம்பிகளா - ஆத்தா
மீட்டுகிற வீணையிது தங்கைகளா

❀✿❀

*07–04–2022*

## 20. அன்னைத் தமிழே

அன்னைத் தமிழே ஆரணங்கே உன்னை
வணங்குகிறேன்
அன்றும் இன்றும் இளையவளே
என்றும் புதியவளே

எத்தனை எத்தனை
ஆபரணங்கள்
அலங்கரிக்கின்றனவோ
அத்தனைக்கும் ஒரு புன்னகையால் ஒளி
தருபவள் நீயில்லையோ
சங்கம் வளர்த்த சேயில்லையோ - தொல்
காப்பியர்க்கும் நீ தாயில்லையோ
வான்மறை ஓதிய வாயில்லையோ - எங்கள்
நெஞ்சில் வளரும் தீயில்லையோ
(அன்னைத் தமிழே)

மற்ற மொழிகளைக் கற்றுத்
தெளிவதுன்
மைந்தர்க்கெலாம் மிக எளிதில்லையோ
சுற்றி இருப்பவர் யாவருமே எம்
சோதரர் என்பது மெய்யில்லையோ
உன்னை அழிக்கும் திறனிந்த உலகத்தில்
யாருக்கும் இல்லை சத்தியமே - நீ
பக்தி மொழி பெருந் தெய்வ மொழி - உன்
வாழ்வும் வளமும் நித்தியமே

*11.04.2022*

## 21. அவன் தீண்டத் தகாதவன்

ஒதுக்கி விடுங்கள் அவனை, அவன் தீண்டத்
தகாதவன்

தீண்டினால் தீட்டில்லை தீப்பற்றிக் கொள்ளும்
தன்னலமும் ஆணவமும் எரியுண்டு போகும்

பேயவள் காணெங்கள் அன்னை எனப்பிதற்றும்
பேய்ச்சி மகனவன்; பித்தம் தலைக்கேறி
ஆய்ச்சி மகனையோர் ஆரணங்காய் அலங்கரித்துக்
காதலித்த சித்தன்; கருங்குயிலின் பாட்டில்தீ
மூட்டிக் கவிதைவெறி மூண்டே நனவழிந்து
நாதக் கனலில் உயிர்மாய்த்துக் கொண்டவன்;
காக்கை குருவியாய் வானில் பறப்பவன்,
கடலும் மலையுமாய்த் தரையில் கிடப்பவன்,
கல்யாணம் கிடக்கட்டும் காத்திருப்பேனோ என்று
கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தவன்;
மனிதர் உணவை மனிதர் பறிக்கின்ற
உலகை அழித்துவிடும் உன்மத்தன்; ஊழியிலே
காளியின் ஆட்டத்தைக் கண்டு ரசித்தவன்;
காலனை எட்டி உதைக்கின்ற காலனவன்;
நட்டநடு வானத்தில் அசரீரியாய் நின்று
பேசாப் பொருளெல்லாம் பேசியவன்; தன்னைச்
சுற்றிய பகையைச் சுட்டெரிக்கும் வேல்முனையை
நெற்றிப் பொட்டில் நிறுத்தியவன், திக்கெல்லாம்

வெற்றி முரசு கொட்டியவன், பாதகரை
மோதி மிதிக்கின்ற மூர்கத்தைச் சிறுவர்க்கும்
கற்றுக் கொடுத்த கடுஞ்சொல் ஆசிரியன்;
ராமர்வில் லைப்பறித்து பாரதமா ராணியவள்
தோளில் கிடத்தியே தோத்திரங்கள் பாடியவன்;
புதமண்ட லத்தில் இருந்தானாம், பின்னவனே
பூமிக்கு வந்தானாம், தந்தை பயித்தியமாம்!
மோகத்தைக் கொல்வதற்கே மூச்சை நிறுத்தித்
தேகத்தைச் சாய்த்திடென்று தேவியிடம் கேட்டவனாம்!
புவியில் தமிழே இனிதென்று பூரித்துச்
செவியில் தேன்பாய்ச்சிக் களிப்பானாம்; தீயின்
துண்டை மரப்பொந்தில் கொண்டுவைத்துக் காட்டை
எரித்துப் பொசுக்கி எகிறிக் குதிப்பானாம்!
தலையில் முண்டாசு, தணல்விழிகள், கூர்மூக்கு,
மீசை முறுக்கு, மிதமிஞ்சிய மிடுக்கு,
கருங்கோட்டுக் கீழ்பஞ்ச கச்சம், உள்நுழைந்தால்
நெஞ்சில் கனல்மணக்கும் பூக்கள், நினைவெல்லாம்
செஞ்சுடராய் நின்றெரியும் தீபம்; இதற்கு மேல்
ஒருகோடி சூரியர்கள் ஊற்றெடுக்கும் உண்மையொளி!
வாயைத் திறந்தால் வரும்நெருப்பு வார்த்தைகள்!
தள்ளியே நில்லுங்கள் - அவன்
கொள்ளிவாய்ப் பிசாசு!
அச்சோஅப் பேயனுக்கே ஆளான காரணத்தால்
என்னையும் நீங்கள் ஒதுக்கி விடுங்கள் - இங்(கு)
எனக்கவனே எல்லாம் இனி

❀✿❀

*18.04.2022*

## 22. நானே முதல் ரசிகன்

நட்சத்திரங்களின் நடுவினிலே - ஒரு
புகை மண்டலத்தின் விளிம்பினிலே
வானாய் விரிந்த ஒரு கனவில்
யாரோ புனைந்த பாடல் அது
- அதைப்
பாடுவதால் நான் கவிஞன்
கேட்பதனால் நீ ரசிகன்

நான் சென்(று)அதைக் கவர்ந்தேனா - அவன்
என்னுள் நுழைந்தெனை ஆட்கொண்டானா
வானும் நானும் ஒன்றானதனால்
நானே அதுவானேனா - நான்
பாடுவதால் அது கவிதை
கேட்பதனால் நீ ரசிகை

நான் படைத்தேன் என நீ நினைத்தாய் - என்
வார்த்தைகள் என்று நீ ரசித்தாய்
நானும் நீயும் சந்தித்துக் கொள்ள
பாதையொன்று நீ சமைத்தாய்
- நீ
நினைத்ததனால் நான் கவிஞன் - என்
கவிதைக்கு நானே முதல் ரசிகன்

❀✿❀

*22.04.2022*

## 23. நான் ஒரு பயணி

ஆன்மிகப் பாதையில் நான் ஒரு பயணி - என்
நடை உடை பாவனை அனைத்தையும் கவனி

அங்கங்கே சில தடுமாற்றங்கள்
அவ்வப்போது எழும் ஆச்சரியங்கள்
செங்குத்தாய்ச் சில ஏற்ற இறக்கம்
சமவெளி யாகவும் சிலபொழு திருக்கும்
எங்குற்றாய் என மலர்கள் வினவும்
ஏன் வந்தாய் என அலைகள் புலம்பும்
ஒருமைக்குள் இவை அனைத்தும் அடங்கும்
என்பது போல்வான் விரிந்து கிடக்கும்

ஒரு சில அடிகள் எடுத்து வைத்துள்ளேன்
இன்னும் எத்தனை தூரம் என்பதை
இறைவன் மட்டுமே அறிவான் - அவன்
கருணையால் மட்டுமே இப் பயணம் தொடரும்.

*14–05–2022*

## 24. சந்திக்கப் பாடுகிறேன்

சிந்திக்கப் பாடவில்லை - எந்தச்
செய்தியும் கூறவில்லை
- நாம்
சந்திக்கப் பாடுகிறேன் - உயிர்
சங்கமிக்கும் களம் தேடுகிறேன்
(சிந்தித்துப் பாடவில்லை)

முன்பொரு பிறவியில் மூண்ட தழல்
இன்னும் எரிகிறது
முன்வினை எல்லாம் தீர்ந்த பின்னேயொளி
முகமாய் விரிகிறது - இது
நாடகம் என்பது புரிகிறது - நாம்
நடத்துகிறோம் என்றும் தெரிகிறது
(சிந்தித்துப் பாடவில்லை)

விண்ணுக்கும் மண்ணுக்கும் வியப்புக்கும் விடைக்கும்
இடையினிலே ஒரு பாலமிட்டு
எண்ணுக்கும் எழுத்துக்கும் ஓசைக்கும் இசைக்கும்
வடிவம் இழைத்துக் கோலமிட்டுப்
பாடுகிறேன் நாம் ஒன்றாக - என்
பாடல்களே வழி என்றாக
(சிந்தித்துப் பாடவில்லை)

*28.05.2022*

## 25. செல்லம்மா கல்யாண வைபோகமே

செல்லம்மா கல்யாண வைபோகமே
 - நம்
சிந்தையெங்கும் பொங்கும் குதூகலமே

செல்லம்மா பாரதி கல்யாணமே

அக்கினி சாட்சியாகவே ஓர்
அக்கினிப் பிழம்பைக் கைப்பிடித்தாள்
சொக்கர் மீனாட்சி போலவே
சந்தோஷமாக வாழ்கவே

செல்லம்மா பாரதி கல்யாணமே

அரி
வாளைக் கொண்டு பிளந்தாலும் - கட்டு
மாறா உடலுறுதி
கனக்கும் செல்வம் நூறு வயது
தரவேண்டும் பராசக்தி

செல்லம்மா பாரதி கல்யாணமே

ஒவ்வொரு சொல்லும் சுடராக
மாலை தொடுப்பானே - பா

மாலை தொடுப்பானே
சுதந்திர தேவியின் தோள்களிலே - அதைச்
சூட்டி மகிழ்வானே - மாலை
சூட்டி மகிழ்வானே
அக்கிரமங்கள் எரிக்கின்ற - தழல்
மூட்டி வளர்ப்பானே - தழல்ஃ
மூட்டி வளர்ப்பானே
வையத் தலைமை கொள்வானே - ஒளி
யாக விரிவானே - ஒளி
யாக விரிவானே
அவனே எங்கள் சுப்பையா
அவனே முருகப் பெருமானே

*20-06-2022*

# 26. வரலாற்றில் பங்கேற்க நான் அழைக்கிறேன்

வரலாற்றில் பங்கேற்க நான் அழைக்கிறேன் - ஏன்
வரமாட்டேன் என்றுநீ அடம்பிடிக்கிறாய் - உன்
வரவாலே வரலாறு திசைமாறுமா - ஒரு
வரலாறு புதிதாக உருவாகுமா
(வரலாற்றில்)

வானம் பூமி அருவி குருவி அத்தனையும் பாடிக்
வண்ணநிலா பாடிக் கொஞ்சம் காதலையும் பாடி
நானும் நீயும் விளையாடிக் களித்ததெல்லாம் போதும்
- இனி
நாடகத்தின் உச்சகட்டம் கோபஅலை வீசும்
(வரலாற்றில்)

இங்கே
ரத்தவெறி கொண்டலையும் பேய்கள் எத்தனை -
கொடும்
ராட்சஸர்கள் வஞ்சகர்கள் இன்னும் எத்தனை
ஏழைகளை ஏய்த்து வாழும் எத்தர் எத்தனை
இவர்நடுவே எதற்கின்னும் ஆலாபனை
(வரலாற்றில்)

இயற்கையையே பாடிக்கொண்டு நாமும் வாழ்வதா - இல்லை
இலட்சியத்தை மீட்கப்போர்க் கோலம் கொள்வதா
செயல்வீரம் இல்லாமல் சோரம் போவதா - என்ன
செய்யவேண்டும் பாடத்தை நான் சொல்வதா
உன்னுடைய மௌனத்தை நீகலைத்திடு - என்
உணர்ச்சியிலே தீமூட்டித் தழல்வளர்த்திடு
(வரலாற்றில்)

❀✿❀

*20–09–2022*

## 27. மணிப்பூரகச் செல்வியே!

(மணிப்பூர் ஆளுநராக அப்போது இருந்தவர்; கட்சி எல்லைகளைக் கடந்து நான் பழகி, நட்புப் பாராட்டிய நல்லவர்; என் முன்பிறந்த அண்ணனாகவே நான் நேசிக்கும் நண்பர்; திரு.இல.கணேசன் அவர்களுக்குக் கொஞ்சம் உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டு, அவர் மருத்துவ மனையில் அனுமதிபக்கப்பட்டு, நலம் பெறத் தொடங்கியதும் அவருக்காக அன்னை மீனாட்சிகயிடம் நான் வைத்த வேண்டுதல், இந்தக் கவிதை).

அண்ணனுக்காகவே அர்ச்சனை செய்கிறேன்
அழகு தமிழ்ச் சொற்களால்
அன்னை மீனாட்சியுன் கடைவிழியால் அவர்க்கு
அமுதம் தரவேண்டினேன்
இன்னும்பல் ஆண்டுகள் இல.கணேசனார்
எங்களுடன் வாழவும்
என்றுமவர் புன்னகை முகத்தையென் கண்களில்
நேருக்கு நேர் காணவும்
எண்ணம்சொல் செயலெல்லாம் தேசத்துக் கேதந்த
எழுச்சிக் குரல் கேட்கவும்
என்நூறு வயதில் அவர் முன்னின்று வாழ்த்தவும்
இசையோடு நலம்சூழவும்
கண்ணுக்குள் கண்ணாகி என்னையியக் கும்நித்ய
கல்யாண வைபோகமே
கணம்கூட காக்கவைக் காமலருள் பொழிக்கின்ற
கருணையே ஆனந்தமே

பொற்றா மரைக்குளத்தைப் புதுப்பித்தவர் சங்கப்
பலகையைப் பூசிப்பவர்
புண்ணிய பூமியாம் பாரத தேசத்தைத்
தாயாக நேசிப்பவர்
வற்றாத நதிபோன்ற வளமான செந்தமிழை
வாயார வாசிப்பவர்
வாழ்வாங்கு வாழவே வரம்வேண்டு கின்றேன்
மதுரையாள் கின்றவடிவே
கற்றாரும் உன்னருளே பெற்றாரும் இன்றிதையே
கசிந்துருகி வேண்டுகின்றார்
கனகமழை பொழியுமுன் சரண கமலாலயத்தில்
கவிதைமழை பொழிகிறேனே
மற்றாரும் இல்லையம் மாவுன் மகனின்று
மடிப்பிச்சை யாசிக்கிறேன்
மலரட்டும் மீனவிழி புலரட்டும் புதியஒளி
மணிப்பூ ரகச்செல்வியே

❀✿❀

*03–10–2022*

## 28. பாரதி சின்ன பயல்

(பாடலைக் கேட்க Youtube Channel: Vanail K.Ravi)

பாரதி சின்ன பயல் - அன்று
பாரதி சின்ன பயல் - என்று
பாடிய பொழுதே கவிதைப் புயல் - அன்று
பாரதி சின்ன பயல்

பாரத மேயெதிர் பார்த்த புயல் - கண்டு
பரங்கியர்கள் உடல் வேர்த்த புயல்
ஜாதிப் பிரிவுகள் போயொழிய - சம
நீதிக்கு முதலில் ஒலித்த குரல் - அன்று
பாரதி சின்ன பயல் - என்று
பாடிய பொழுதே கவிதைப் புயல்

ஞானரதம் ஒன்று காத்திருக்க - நெஞ்சில்
கனல்மணக்கும் பூக்கள் பூத்திருக்க - வானம்
கண்ணம்மா என்ற வடிவெடுக்கப் - பட்டுக்
கருநீலப் புடவை விரித்திருக்க - அன்று
பாரதி சின்ன பயல் - என்று
பாடிய பொழுதே கவிதைப் புயல்

பண்டித நடையில் அடைந்து கிடந்த
தமிழ்ப்பறவைக்குச் சிறகளிக்க
அடிமைத் தளையை உடைத்தெறிந்(து) அன்னை

பாரத தேவிக்(கு) ஒளிகொடுக்க
உலகம் முழுதும் ஒற்றுமையாக
வாழ்வதற்கேற்ற வழிபிறக்க
கலகத் தரக்கரை எரித்துவிட - மா
காளிபரா சக்தி கண்திறக்க
பாரதி சின்ன பயல் - அன்று
பாரதி சின்ன பயல்
- இன்று
பார்முழுதும் பரவி வளரும் தழல்

*08-10-2022*

## 29. என்ன மாயம் செய்கிறாளோ

(பாடலைக் கேட்க Youtube Channel: Vanail K.Ravi)

என்ன மாயம் செய்கிறாளோ
என்ன சீலை நெய்கிறாளோ
எந்தக் குளத்தில் மொண்டு கொண்டு வந்தென்
நெஞ்சில் அமுதம் பெய்கிறாளோ
(என்ன மாயம்)

என்னிலிருந்தே தன்னை வெளியில்
எடுத்துச் சென்றவள் யார்
எடுத்துச் சென்றதற் கான விலையைக்
கொடுத்துச் சென்றவள் யார்
எண்ணங்களில் சில வண்ண மலர்களைத்
தொடுத்துத் தந்தவள் யார்
என்னையும் விண்ணையும் ஓரிழையாக
உடுத்திக் கொண்டவள் யார்
(என்ன மாயம்)

வண்டுபோல் என்னைத் துளைத்தெடுத்தொரு
வாசலமைத்துக் கொள்கிறாள் - அதில்
வந்து வந்து கவி தந்து தந்து சின்ன
பந்துபோல் துள்ளிச் செல்கிறாள்
எண்டிசையும் தீப் பற்றி எரிய

மேக நர்த்தனம் செய்கிறாள் - பித்துக்
கொண்டவள் போல் கொஞ்சம் கெஞ்சுகிறாள் -
என்னைக்
கொள்ளையடித்தபின் கொஞ்சுகிறாள்
(என்ன மாயம்)

❀✿❀

*24–10–2022*

## 30. எத்தனை விண்மீன்கள்!

என்னை விழுங்கிய இருட்டுக் குள்ளே - ஓ
எத்தனை விண்மீன்கள்
நானும் ஒன்றாய் ஆவதற்கா
இத்தனை ஜன்மங்கள்!

புல்லாய் இருந்த போதென் தலையில்
மகுடம் சூட்டிய தொன்று
புழுவாய் நெளிந்த போதெனக்குப்
பாதை காட்டிய தொன்று
நெல்லாய் அசைந்த போது பருக
நீரை அள்ளித் தெளித்தது
நெருப்பாய்க் கனன்ற போதெனக்குள்ளே
நிழலாய் நின்று சிரித்தது

என்னை விழுங்கிய இருட்டுக் குள்ளே - ஓ
எத்தனை விண்மீன்கள்

கானகத்தில் திரிந்த போது
கண்ணில் வெளிச்சம் கூட்டியது
போன ஜன்ம நினைவிலாமல்
புதுப்புதுப் பிறவி காட்டியது
மானுடனாகப் பிறந்த பிறகே
வரவேற்கக் கை நீட்டியது

ஆனவரை என் ஆரம்பத்தை
அவ்வப்போது நினைவூட்டியது

என்னை விழுங்கிய இருட்டுக் குள்ளே - ஓ
எத்தனை விண்மீன்கள்

நானும் இந்த நாடகத்தை
நடத்தத் தானே போகிறேன்!
வானமாகி இன்னொரு வெளியில்
சுழலத் தானே போகிறேன்
வெயிற்படுக்கை விரித்து நானே
வெவ்வேறாகப் பிரிந்திடுவேன்
உயிர்க் குலத்தை உருவாக்கிடுவேன்
ஒவ்வொன்றாக மேய்த்திடுவேன்

என்னை விழுங்கிய இருட்டுக் குள்ளே - ஓ
எத்தனை விண்மீன்கள்
நானும் ஒன்றாய் ஆவதற்கா
இத்தனை ஜன்மங்கள்!

❀✿❀

*17–01–2023*

## 31. எப்படி வணங்குவது?

எதிரில் வந்து நின்று விட்டாய்
எப்படி வணங்குவது - கையில்
ஏந்தி வந்த தீபத்தை நான்
எங்கே வைப்பது

அணைந்து விடும் என்றுதானே
மூச்சுக் காற்றை அடக்கிக் கொண்டேன்
நனைந்து விடும் என்றுதானே
கண்ணீரையும் நிறுத்திக் கொண்டேன்
புனைந்து வைத்த பாடலையும்
மறந்து போய்விட்டேன்
நினைவெல்லாம் நீ நிறைந்திருக்க
எப்படி வணங்கிடுவேன்

எதிரில் வந்து நின்று விட்டாய்
எப்படி வணங்குவது

நீ
நிமிடம் கூட நிற்க மாட்டாய்
ஒரே கணத்தில் மறைந்து விடுவாய்
அதற்குள் எப்படி வணங்குவது - சின்ன
சிமிழுக்குள் ஒரு கடலை அடக்கும்
முயற்சியை எப்படித் தொடங்குவது - இந்தக்

கவிதைக்குள் அடியெடுத்துவை - அதன்
சுடர்தான் கையில் இருக்கிறது - இந்தச்
சுடருக்குள் நீ நுழைந்து விட்டால்
நானே சுடராய் மாறிடுவேனே!

❀✿❀

*(07–01–2023)*

## 32. ஒவ்வொரு கதவாய்த் தட்டிப் பார்த்தும்....

ஒவ்வொரு கதவாய்த் தட்டிப் பார்த்தும்
உன்னைக் காணவில்லை
எத்தனையோ பேர் அன்னமிட்டும் - என்
வயிறு நிறையவில்லை

இரவும் பகலும் உழன்ற பிறகும்
பொழுது புலரவில்லை
எப்பொழுதோ நான் சிந்திய கண்ணீர்
இன்னும் உலரவில்லை

எடுத்து வந்த மலர்களை நான்
தொடுத்து முடியவில்லை
ஒவ்வொன்றாக உதிர்ந்ததனாலே - என்
கையில் எதுவுமில்லை

என்றேனும் நீ வருவாய் - வேண்டாம் - உன்
நிழலே போதும்
அந்த நிழலை வரவேற்காமல் - என்
கண்கள் உறங்கிடுமா - இந்தக்
கவிதை மறந்திடுமா

*(31–12–2022)*

## 33. தன்னை இழத்தல்

**(“கடமையாவன தன்னைக் கட்டுதல் பிறர் துயர் தீர்த்தல் பிறர் நலம் வேண்டுதல்” என்று தொடங்கும் பாரதியின் கவிதையை என் மனம் முணுமுணுத்துக் கொண்டிருக்கும் போதே இந்தக் கவிதை தோன்றியது. கவிதையே கவிதையின் கருப்பொருளாய் பல கவிதைகளில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது. அப்படியொரு கவிதை இது. கவிதா தேவியின் பூரண தரிசனத்தைக் கண்டு நெகிழ்ந்து பாடிய குருதேவர் ரவீந்திரநாத் தகூர் பிறந்த நாளில், அவருக்கு இந்தக் கவிதையைக் காணிக்கையாக்குகிறேன்.)**

கவிதையாவது தன்னை இழத்தல்
தானென்றெதையோ எண்ணிக் கொண்டு
“நான்” என்றதையே நம்பிக் கொண்டு
ஊனும் உடலு மாக மட்டுமே
உழலும் சகதியில் இருந்து சற்றே
விடுபட முனையும் வேட்கை
கவிதை
ஒருகணம் சிறகு விரித்துப் பறக்கும்
ஒருகணம் அமுத ஊற்றாய்ச் சுரக்கும்
ஒருகணம் தானே வானாய் விரியும்
ஒவ்வொரு கணமும் உருகிக் கரையும்
ஒருமை என்ற தத்துவத்தில்
தனித்துவத்தின் மகத்துவத்தை
அனுபவிக்க வைப்பது கவிதை
அதிர்வுக் கேற்ப அதிர்வதும் - அகங்

காரம் நீங்கி உதிர்வதும்
கொடுமை கண்டால் கொதித்தெழுந்து - ஓர்
ஆவேசத்தீ வளர்ப்பதும்
ஒவ்வோர் உயிருக்குள்ளும் - ஏன்
ஒவ்வோர் அணுவுக்குள்ளும் தன்னை
உணரும் கணமே உன்னதக் கவிதை!

❀✿❀

*14–02–2023*

## 34. அனைவருமே குருநாதர்களே

ஒருநாதனே பல குருநாதராய் வழி
காட்டுவதால் இங்கு பேதமில்லை - தன்னை
மறுப்பவர் மீது வெறுப்பினை வளர்க்கும்
மதவெறியின் பெயர் வேதமில்லை (ஒருநாதனே)

யார்க்கெது தேவை என்றறிந்து - தரும்
தாயுள்ளமே ஒரு சத்குருவாம்
பார்க்கெலாம் ஒளிப் பாதை காட்டும்
தருணம் அவரே ஜகத்குருவாம் (ஒருநாதனே)

கர்ம யோக பக்தி நெறிகள்
காட்டுபவனும் ஒரு குருநாதன்
ஞானத்தின் எல்லைக் கோடுகளை
வரைபவனும் ஒரு குருநாதன்
தானெனும் ஆணவம் தகர்ந்துவிடத்
தானே அதுவென் றுணர்ந்துவிட
மாயையைக் கடக்கும் மார்கத்தைப் புகட்டும்
மாமுனிவனும் ஒரு குருநாதன் (ஒருநாதனே)

மரம்செடி கொடிகள் விலங்குகள் பறவைகள்
மனிதர்கள் எல்லாம் ஒருயிரே
கடலும் மலையும் கோள்களும் வானமும்
யாவுமொன் றின்பல வடிவங்களே

ஹரியும் ஹரனும் பரம பிதாவும்
அல்லாவும் அதன் நாமங்களே
அகவிழி திறக்க உதவுகின்ற
அனைவருமே குருநாதர்களே (ஒருநாதனே)

❀ ✿ ❀

*14–04–2023*

## 35. ஓர் எறும்பு ஊர்வலம்

எந்தப் பாறையைச் சுமந்து செல்ல
இத்தனை எறும்புகள் வந்தனவோ - எதையோ
உருட்டிக் கொண்டும் சுமந்து கொண்டும்
ஊர்வலமாகச் சென்றனவோ

நடப்பவர் எல்லாம் சுலைமானைப் போல்
பார்த்து நடப்பாரோ
மிதித்து விடாமல் தாண்டிச் சென்று
சாலை கடப்பாரோ
வீசியடித்தால் கலைந்திடும் என்று
காற்றும் நின்று செல்லுமோ
வேட்டைதான் என்று பல்லி ஒன்று
சுவரில் இருந்து துள்ளுமோ

ஏதோ ஒன்றைச் சுமந்து கொண்டென்
சொற்களும் இப்படித்தான்
ஊர்வலம் போக உலகம் அதையே
கவிதை என்று ரசிக்கிறது - ஒரு
காட்டுப் பூ விகசிக்கிறது.

*(04–03–2023)*

## 36. உளறி விட்டுப் போகிறேன்

நான் உளறுவதாகச் சொல்கிறாய்
உளறி விட்டுப் போகிறேன் - என்
உளறலிலே ஒவ்வொரு சொல்லும்
உயிர்த்துக் கொள்கிறதே!

உயிர்த்துக் கொள்ளும் சொற்கள் விடுக்கும்
மூச்சுக் காற்றின் சூட்டினிலே
உணர்ச்சிக் குமிழ்கள் தளதளவென்று
கொதிக்கின்றன என் பாட்டினிலே - நான்
உளறுவதாகச் சொல்கிறாய் உளறி விட்டுப்
போகிறேன்

அனுமன் வாலில் இருந்தொரு பொறியும்
கண்ணகிக் காம்பில் இருந்தொரு பொறியும்
சீதை இறங்கிக் குளித்ததில் இருந்து
சிதறிய ஒருபொறியும்
பெற்று வளரும் நெருப்பு - இதைப்
பேணிக் காப்பதென் பொறுப்பு

உலகியற் றியவனைக் கெடுக என்று
சாபமிட்டது இந்த நெருப்பு
ஒருவன் பசிக்கே உலகை அழிக்கச்

சபதம் எடுத்த கோப நெருப்பு
நால்வரோடு பன்னிருவர்
நாவில் வளர்ந்த பக்தி நெருப்பு
நாளை உலகின் நம்பிக்கையை
நாளும் வளர்க்கும் சக்தி நெருப்பு
அன்னை அளித்த நெருப்பு - இதை
என்றும் வளரச் செய்வதென் பொறுப்பு

விருந்து வேண்டும் என்றால் கொஞ்சம்
வேக வைத்துக் கொள் - குளிர்
விலக வேண்டும் என்றால் அருகில்
வந்தமர்ந்து கொள்
காட்டை எரிக்க வேண்டும் என்றால் - தீப்
பந்தம் கையில் எடு
கவிதை வேண்டும் என்றால் மட்டும்
உள்ளே குதித்து விடு.

நான்
உளறுவதாகச் சொல்கிறாய் - ம்!
உளறி விட்டுப் போகிறேன் - உன்
உள்ளத்திலும் ஒரு கனலிருக்கிறதே - அதைக்
கிளறி விட்டுப் போகிறேன்

❀✿❀

*(04–03–2023)*

## 37. இதற்குத்தானே காத்திருந்தாய்

இதற்குத்தானே காத்திருந்தாய்
இத்தனைக் காலமும் - இதோ என்னை முழுதும்
திறந்து வைத்து விட்டேன் எடுத்துக் கொள்

எலும்பும் சதையும் குருதிப் புனலும் கடந்து செல்
உள்ளே பார்!
சின்னஞ் சிறிய சுடரொன்று சிரித்துக் கொண்டே
வரவேற்கும்
இதற்குத்தானே காத்திருந்தாய் இத்தனைக் காலமும்

என்ன தயக்கம் மூன்றடிதான் எடுத்துவை - என்
ஏகாந்தத்தை தவத்தை இன்றே முடித்துவை

இதற்குத்தானே காத்திருந்தாய் இத்தனைக் காலமும்

உள்ளே இருக்கும் சுடர் இப்பொழுது மெல்ல
அசைகிறதே
உள்ளே இருந்து வெளியே தன்னை உந்திச்
செல்கிறதே
நீவர வேண்டாம் நான் வருகின்றேன்
என்று அந்தச் சின்ன சுடர்
உன்னை நோக்கிப் புறப்பட்டு
ஓரடி எடுத்து வைத்ததும்
புவியெல்லாம் ஒளிவெள்ளம்
அடுத்த அடி வைத்ததும் - வெட்ட

வெளியெல்லாம் விரவியது பேரொளி!
மூன்றாவது அடிக்கு தலை தரப் போவது நீயா நானா

கடகடவென்ற சிரிப்பொலி கேட்டுக் கண்விழித்தேன்
சிரித்தது சுடரொளி
வெளியே தெரிந்த அதன் பிம்பத்தை
நீயென்றெண்ணி இதுவரை நானும்
எனக்குள்ளே உரையாடியது கேட்டுக்
கடகடவென்று சிரித்தது சுடரே

எதைக் கடப்பது யார் கடப்பது

“கடந்து செல் உள்ளே செல் கடவுள் நீ”
கட்டளை இட்டது அந்தச் சுடர்

இதற்காகத்தான் காத்திருந்தேன் இத்தனைக் காலமும்!

❀✿❀

*(17–04–2023)*

## 38. புத்தகம் நீதான்

வித்தகன் இல்லைநான் புத்தகம் நீதான்
நான்
வாசிக்கும் மாணவன் தான் - உன்னை
வாசிக்கும் மாணவன் தான்

நித்தமும் என்றன் நித்திரை கலைத்துப்
புத்தமுதம் பொழியும் பூரணியே
(வித்தகன்)

சித்தமும் செயலும் சிறியவன் மொழியும்
அத்தனையும் உன் அருளன்றோ
சிறகடித்து மனம் பறப்பதெல்லாம் உன்
விழிசுழல்வதனால் அன்றோ
எத்தனைக் காலம் நம் உறவு - இன்னும்
எத்தனைநாள் நீ நான் என்ற பிரிவு
எப்பொழுது தடை நீங்குவது - இன்னும்
எத்தனை நாள் நான் ஏங்குவது

*25–05–2023*

## 39. சாளரக் கதவைச் சற்றே திறந்துவை!

சாளரக் கதவைச் சற்றே திறந்துவை
சங்கீத மாக நுழையட்டும் காற்று
சுவர்க்கடிகாரத் தாளத்துக் கேற்ப - உன்
ஸ்வாஸ கதியை அமைத்துக் கொள்
பாறையாக கனத்த நெஞ்சம்
பனியாய் உருகும் பரவசம் உணர்வாய்
முழுதும் உருகி முடிந்த பிறகு
மூல வெளிச்சம் தெரியலாம்
கால வெளியென் றிரண்டும் கடந்து
ஞாலமாக விரியலாம் - ம்!
இந்த இசை
வெளியில் இருந்து வரவில்லை
உனக்குள் இருக்கிறது உயிரூற்று
காற்றுக் கரங்கள் கலைத்தது - அதன்
மௌனப் போர்வையைத்தான்
நேற்று வரை நீ மனிதப் பிறவி
இன்று நீயே இறைவன் இறைவி
இசையாய் வாழப் பழகு - திக்குத்
திசையெல்லாம் அழகு - ஒளி
பருகிப் பருகி விரிய விரிய
உருகி வளரும் புதிய மெழுகு - மனச்
சாளரக் கதவைச் சற்றே திறந்துவை!

*31–05–2023*

## 40. புதியதோர் உலகம் செய்வோம்!

என்னோடு வாழ்ந்த நாட்களை மறக்கலாம்
என்னோடு நடந்த நினைவுகள் மறையலாம்
பண்ணோடும் கவிதைப் பரவசத்தோடும்
பழகிய கணங்கள் என்றும்
பசுமையாய் இருக்கும் - ஆம்
அவ்வப்போது - உன்
கண்களிலிருந்து விழும் துளிகளில்
மலர்களாகப் பூத்துச் சிரிக்கும்

நமக்காகத்தான் பாடினோம் ஆனால் அந்த
நாம்தான் எத்தனைப் பரந்து விரிந்தது
வானத்தையே நம்முள் அடக்கி
வியனுலகாக விரிந்து கொண்டே
வியந்து வியந்து ரசித்தோமே
ஒவ்வொரு சொல்லிலும் இளைப்பாறிப் - பாடல்
ஒவ்வொன்றிலும் நாம் வசித்தோமே
மறக்க முடியாது
அந்த சொர்கத்தை ஒருபோதும் நாம்
இழக்க முடியாது

கணம் கணமாக நினைத்துப் பார்த்தால்
இழையிழையாகப் பிரித்துப் பார்த்தால்
நிரந்தரம் என்பது புரிந்துவிடும்

நீ நான் இரண்டும் கலந்துவிடும்
மீண்டும் ஒரு
புதிய உலகம் பிறந்துவிடும்.
வா!
புதியதோர் உலகம் செய்வோம்!

❀✿❀

*25–08–2023*

## 41. எதையும் மாற்றவில்லையா?

என்ன?
என் கவிதை எதையும் மாற்றவில்லையா?
ஒரு
மனசுக்குள்ளாவது சுடர் ஏற்றவில்லையா?
நான்
எழுதுவதால் பயனெதுவும் விளையவில்லையா?
ஓ!
எங்கேனும் ஒருதுயரம் தொலையவில்லையா?

சரி!
கூவிக் கூவித் தன்னை இழக்கும்
குயிலைக் கேட்டுப் பாருங்கள்
குளிரக் குளிரச் சாரலடிக்கும்
மேகப் பொதியைக் கேளுங்கள் - ஒரு
பூவிலிருந்து சிதறுகின்ற
மகரந்தங்கள் சேருங்கள்
பூமித் தாயின் கோடி முகங்கள்
புன்னகைப்பதைக் காணுங்கள்

தனிமையில் முணுமுணுக்கும்
மௌன ராகம் கேட்டீரா
தலையசைக்கும் தென்றல் காற்றை
வரவேற்க மாட்டீரா
மனித ரோடு மட்டும் இல்லை
மலைகளோடும் பேசலாம்

மரங்களோடும் விலங்குகளோடும்
மகிழ்ச்சியாகப் பாடலாம்

துன்பத்தை மாற்ற ஒரு பாடல்
துணிச்சலைக் கொடுக்க ஒரு பாடல்
அன்புக்குக் கட்டியம் ஒரு பாடல்
அழகுக்கு அழகு சேர்க்க ஒரு பாடல்
வன்கொடுமை அக்கிரமம் அதிகார மமதையெனும்
வஞ்சகப் பேய்களை விரட்ட ஒரு பாடல்

தளர்ந்து போன தோள்களை எல்லாம்
தட்டி எழுப்ப ஒரு பாடல்
உலர்ந்து போன நாவிலும் தேன்
ஊற்றெடுக்க ஒரு பாடல்
மலரப் போகும் மொட்டுகளுக்குள்
தவமிருக்கும் ஒரு பாடல்
மரணமின்றி வாழ்வதற்கு
வழியமைக்க ஒரு பாடல்

என் கவிதை எதையும் மாற்றவில்லையா?
நேற்றுப் பொழுது மறைந்த பிறகும்
நாளை இன்னும் விடியவில்லையா?
இன்றென்ற கவிதை இந்தக்
கணத்தோடு முடியவில்லையா?

*04–09–2023*

## 42. குறுக்குச் சுவர்கள்

மனத்தில் உள்ள குறுக்குச் சுவர்களை
இடித்துத் தள்ளுங்கள்
உயிர்களெல்லாம் ஒன்றே என்ற
உண்மை உணருங்கள்

அறிவில் படர்ந்த நூலாம் படையை
அகற்றி எறியுங்கள்
அழிவில்லாத தர்ம நெறியில்
துணிந்து செல்லுங்கள்

ஜாதிகள் இல்லை ஜாதிகள் இல்லை
உரக்கச் சொல்லுங்கள்
மேல், கீழ் என்ற மாயத் திரையை
கிழித்துப் போடுங்கள்

ஒன்றே ப்ரும்மம் ஒன்றே கடவுள்
நாம ரூபங்கள் பலவாம்
இன்றே இந்தச் செய்தியை உலகுக்(கு)
எடுத்துக் கூறுங்கள்

அரசியல் வாதிகள் கோஷம் இடட்டும்
அலட்சியம் செய்யுங்கள்
ஓட்டுக்காக ஓலம் எழுப்பும்
வியாபாரிகள் அவர்கள்

ஜாதிகள் ஒழிய வேண்டும் என்று
கட்டளை போடுங்கள்
நாமே மன்னர்கள் அவர்களெல்லாம்
நம் பணியாளர்கள்

ஜாதிகள் ஒழிக பேதங்கள் ஒழிக
மக்கள் விழித்தெழுக
பாரதி போட்ட பாதையில் ஒன்றாய்ப்
பயணம் தொடர்ந்திடுக.

*09–09–2023*

## 43. என்னைப் பேச விடுங்கள்!

உங்களைச் சூழ்ந்திருக்கும்
உண்மைகளை மட்டும் பேசச் சொன்னால்
உங்களைக் கடந்திருக்கும்
உண்மைகளை யார்காட்டுவார்?
மனிதர்களோடு மட்டும் என்னைப் பேசச் சொன்னால்
மரம் செடி கொடிகளோடு யார்பேசுவார்?
என்னைப் பேச விடுங்கள்
தோழர்களே தோழிகளே
என்னைப் பேச விடுங்கள்

பேச்சுக்குள் இருந்து மூச்சுவிட்டுக் கொண்டிருக்கும்
சொற்களில் இருந்தெழும் சுடரை
சொற்களுக்கிடையில் சிரிக்கும் மௌனத்தை
உற்று நோக்க முற்படுங்கள்
சில சொற்கள்
உங்கள் கண்கள் சிந்தும் துளிகளாகும்
சில
உங்கள் நெஞ்சுக்குள்ளே அலைமோதும்
சில
உங்கள் நிரந்தரத்தை உறுதி செய்யும்

என் பேச்சு வெறும் பேச்சில்லை - அது
வானம் எனக்குள் விரிந்திருக்கும்

வைபவத்தின் அறிவிப்பு - உயிர்
மூலப் பரம்பொருள் அவ்வப்போது செய்யும்
புன்முறுவல், விகசிப்பு!
பேசுவது நானில்லை வேறென்னவாம்?
உலகெலாம் நிறைந்திருக்கும்
ஒருதுளி! ஒரு கணம்! நாம்!

❀✿❀

*11–09–2023*

## 44. கவிதையும் உரைநடையும்

சொல்ல நினைத்ததைச் சொல்லிவிட
உரைநடை இருக்கிறது
சொல்ல நினைக்காததைச் சொல்வதற்கே
கவிதை இருக்கிறது

காரண காரியம் கருதித்தான்
கருணை பிறக்கிறது - எந்தக்
காரணமும் இல்லாமலே உயிர்க்
காதல் சுரக்கிறது

சுகதுக்கங்களில் பங்கு கொள்ள - நல்ல
நட்பு கிடைக்கிறது
தூய்மை அடையத்தானே பக்தி
உருக்கம் கொடுக்கிறது

சிந்தை வெளியில் மேய்ந்து விட்டு
வீடு திரும்பும் நேரம் - அறிவு
எந்த நினைப்பும் இல்லாமல் ஒற்றைப்
புள்ளி ஆகிறது
அந்தக் கணத்தின் அமைதியைத்தான்
யாசிக்கிறேன் நானும்
வாசகனே இந்த யாசகனை நீ
மன்னிக்கத்தான் வேண்டும்

*12–09–2023*

## 45. எழுதிக் கொண்டே இருக்கிறேன்

எழுதிக் கொண்டே இருக்கிறேன்
என்னை நானே
எழுதிக் கொண்டே இருக்கிறேன்

எழுத எழுத வளர்கிறதே
எப்பொழுதிது முடியும்
எழுதாத கணமே இல்லை
யாருக்கிது புரியும்

எழுதிக் கொண்டே இருக்கிறேன்
என்னை நானே
எழுதிக் கொண்டே இருக்கிறேன்

அழுது சிரித்(து)அறச் சீற்றத்தோடு
கொதிதெழுந்து குமுறி அடங்கி
அழகை ரசித்தும் அனுபவித்தும்
இயற்கையுடன்சற்(று) அளவளாவியும்
முழுமை என்ற இலக்கை நோக்கி
மோன லயத்தில் மூழ்கியும் - எப்
பொழுதும் நானாய் எனக்குள் இருந்தே
விரியும் வானாய் வியனுலகாய்

எழுதிக் கொண்டே இருக்கிறேன்
என்னை நானே
எழுதிக் கொண்டே இருக்கிறேன்

சின்ன மலரில் இருந்து சிதறும்
மகரந்தத் துளிநான்
முடிவில்லாமல் பயணம் செய்யும்
நட்சத்திர ஒளிநான்
விரிந்து கொண்டே வெறுமையாகும்
மர்மமான வெளிநான்
நீமட்டும் என்ன நீயும் நான்தான்
நிழல் நிஜமாகும் கதைதான்

எழுதிக் கொண்டே இருக்கிறாய்
என்னை நீயே
எழுதிக் கொண்டே இருக்கிறாய்

*12-09-2023*

## 46. கடவுள் எழுதும் கவிதையே

ஒவ்வோர் அணுவும் ஒவ்வோர் உயிரும்
கடவுள் எழுதும் கவிதையே
ஒவ்வொன்றும் வெவ்வேறு ரகம்
வெவ்வேறு முகம் வெவ்வேறு நிறம்
உள்ளே இருக்கும் ஒளியைப் பார்த்தால்
அனைத்தும் இங்கே ஒரே தரம்

ஒவ்வோர் அணுவும் ஒவ்வோர் உயிரும்
கடவுள் எழுதும் கவிதையே

வெண்பா உண்டு விருத்தம் உண்டு
சானட் உண்டு வசனம் உண்டு
காப்பியமாக நீளும் ஒன்று
ஹைக்கூவாக முடியும் ஒன்று

ஒவ்வோர் அணுவும் ஒவ்வோர் உயிரும்
கடவுள் எழுதும் கவிதையே

வடிவை மட்டும் ரசித்திருந்தால்
முடிவை எப்படி ரசிப்பது
முடிவை ரசிக்கக் கற்றுக் கொண்டால்
முடிவில் நிறைய முடியும் என்றால்
முடிவும் முதலும் இல்லாததுவாய்
முழுமைக் குள்ளே வசிப்பது
முழுமுதலை தரிசிப்பது

❀✿❀ *17–09–2023*

## 47. ப்ரபஞ்சக் கவிஞன்!

ஏணி ஏறிச் சென்று வான
விளிம்பை அடைய முடியுமா - வெறும்
தோணி ஏறிச் சென்று பிறவிக்
கடல் கடக்க முடியுமா
அதனால்,
ஞான ரதம் ஓட்டினான் - பல
உலகங்களைக் காட்டினான்
வானில் நின்று பேசினான் - அவன்
ப்ரபஞ்சக் கவிஞனாம் - என்றும்
பேரொளி வீசும் கதிரவனாம்
(ஏணி)

வாணியைச் சரண்புகுந்து
மணிமணியாய் எழுதியவன்
காணி நிலத்தில் கவிதையாலே
மாளிகை எழுப்பியவன் - நல்ல
வீணையாகத் தன்னைப் படைத்து
வீணே எறிவதற்கோ- என்று
ஆணையிட்டான் சக்தியிடம்
ஆவேசக் கவிஞன்
(ஏணி)

*11–10–2023*

## 48. பலூன்காரனா?

பலூன்காரனா?
ஓ நீ பலூன்காரனா?

சின்ன சின்ன புள்ளிகளை
ஊதியூதி அண்டங்களாய்
ஆக்கி விளையாடும் நீ
பலூன்காரனா? நீ பலூன்காரனா?
வெட்ட வெட்ட வளரும் எங்கள்
ஆணவத்தைச் சீரமைக்கக்
கத்தரிக்கோல் வித்தை காட்டும்
சலூன்காரனா? நீ சலூன்காரனா
பலூன்காரனா? இல்லை, சலூன்காரனா?

தர்ம ந்யாயத் தட்டுகளைச்
சமன்செய்து காட்டி வெறும்
கற்பனையை விற்கும்
தராசுக்காரனா?
கற்பனையை விற்றுவரும்
காசையெல்லாம் வெட்டவெளிப்
பொட்டலிலே தூவும்
கரகாட்டக்காரனா
தராசுக்காரனா?
கரகாட்டக்காரனா?

தராசுக்காரனா?
கரகாட்டக்காரனா?

நீ
அரிதாரம் பூசுகின்ற கூத்தாடியா - பல
அவதாரம் எடுக்கின்ற மேதாவியா
நீ கூத்தாடியா? இல்லை மேதாவியா?
எதிர்வந்து நிற்காமல் எங்கேயோ இருந்தபடி
ராஜாங்கம் நடத்தும் சர்வாதிகாரியா - யார்
கண்ணுக்கும் தெரியாமல் கருத்துக்கும் புரியாமல்
மௌனத்தில் வாழ்கின்ற மர்ம யோகியா - உன்
மௌனத்தை உடைப்பதற்கோர் உளி கிடைக்குமா? -
என்
கவிதைக்குள் அப்படியோர் ஒளி பிறக்குமா? - என்
கவிதைக்குள் அப்படியோர் ஒளி பிறக்குமா?

*26–10–2023*

## 49. மஹாகவி!

அந்தப் பறவையின் சிறகிலிருந்து
கீழே உதிரும் இறகைக் கண்டுன்
மௌனம் கலைகிறதா
எங்கோ ஒருகுயிற் பேடை - தன்
துணையை விளிக்கும் கூவல் கேட்டுன்
உள்ளம் நெகிழ்கிறதா
பசியால் குழந்தை அழும்போது - அன்னை
தன்னையே அடித்துக் கொள்வது கண்டுன்
நெஞ்சு பதைக்கிறதா
பதவியில் இருந்து கொள்ளையடிக்கும்
கயமைத் தனத்தைக் கண்டவுடன் உன்
ரத்தம் கொதிக்கிறதா
அப்படியென்றால் நீயொரு கவிஞன்

வானத்தில் பல வர்ண ஜாலங்களை
வார்த்தைகளால் நீ வரைகிறாயா
நதிகள் நடக்கும் தாளத்துக்குன்
கவிதைகளால் ஸ்ருதி சேர்க்கிறாயா
இனம்புரியாத ஏக்கத்தில் எப்பொழுதேனும்
கரைகிறாயா
காற்றுப் புரவியில் ஏறிக் கொண்டு
காலப் பரப்பில் விரைகிறாயா
ஓ!
அப்படியென்றால் நீயொரு கவிஞன்

ஆனால்,
உன்னைக் கடந்து வேறொரு பொருளில்
உன்னால் கலக்க முடிந்தால்
ஒவ்வோர் அணுவின் அதிர்வுகளிலும்
நீயே துடிக்க முனைந்தால்
மனிதர்க்காக மட்டுமின்றிப்
புல்,புழு,செடி,கொடி எதற்கும் இரங்கிக்
கடவுளிடமே சண்டை போட்டு
நியாயம் கேட்க நீ துணிந்தால்
உலகில் உள்ள அத்தனை உயிர்க்கும்
அமரத்துவத்தை அளிப்பதற்குப்
பாடல் இயற்ற உன்னால் முடிந்தால்
ஒவ்வொரு வார்த்தைக் குள்ளும்
ஒருசுடர் ஏற்றி வைத்துச்
சொல்வதெல்லாம் நிகழச் செய்யும்
சக்தி உனக்கிருந்தால்
கவிஞர்களில் நீ மஹாகவி!
அப்பொழுதுதான்
கவிஞர்களில் நீ மஹாகவி!

❀❀❀

*27–10–2023*

## 50. தோழன்–தோழி

என்னை உனக்கு நினைவிருக்கிறதா
நானுன் தோழன் அல்லது தோழி

கைவளை நழுவ மாடத்தில் இருந்தேன்
கண்வலை வீசி நோக்கியவன் நீ
பறவைக் குஞ்சாய் பரிதவித்தவனை
அக்கினிக் குஞ்சாய் ஆக்கியவன் நீ
ஒற்றைக் கல்லாய்க் கிடந்த என்னைக்
கோயில் ஆக்கிய சோழனும் நீ
என்னை உனக்கு நினைவிருக்கிறதா - உன்
தோழியும் நான் என் தோழனும் நீ

எத்தனை முறை நாம் பிறந்து விட்டோம்
அத்தனையும் நாம் மறந்து விட்டோம்
பித்தனைப் போல் நான் பிதற்றுகிறேனோ
பேசாப் பொருளைப் பேசுகிறேனோ
சுடுநெருப்பில் நான் காய்ச்சிய சொல்லில்
இட்ட முத்திரை மறைந்து போகுமோ?
வாரணம் ஆயிரம் சூழ வந்தென்
கைத்தலம் பற்றிய கனவு பலிக்குமா? - இந்தப்
பூவை எடுத்துன் மார்பில் சூடப்
புருஷோத்தமா உனக்குக் கைவலிக்குமா?

*03–11–2023*

## 51. திறந்திடு சீஸேம்

வாசல் பக்கம் வந்தால் என்ன - உன்
வீட்டுக் கதவைத் திறந்தால் என்ன
குறைந்தா போய் விடுவாய்
நேசக் கரங்கள் நீட்ட வேண்டாம்
நிலாமுகத்தைக் காட்ட வேண்டாம்
நீட்டி முழக்கிப் பேச வேண்டாம்
ஒருசொல் அல்லது ஒருதுளிப் புன்னகை
அதுபோதும் அதிலே ஊற்றெடுக்கும்
ஆயிரமாயிரம் கவிதைகள்!

அழகு மிளிரும் அன்பு குழையும்
ஆனந்தம் இழையும்
அமைதியாகச் சின்னஞ் சிறு சுடர்
அகத்துக்குள் நுழையும்
அநீதியைச் சுட்டெரிக்கும்
ஆவேசம் விளையும்
புதிய உலகம் படைப்பதற்கே
புலனைந்தும் விரியும்
எழுதி முடித்து நிமிர்வதற்குள்
யுகமொன்று முடியும்
இப்படித்தான் நாளைக்கும்
ஒருபொழுது விடியும்

விரைந்துவா வாசலுக்கு
நேரமில்லை பூசலுக்கு
கதவைத்
தட்டித் தட்டி ஓய்ந்தன கைகள்
எட்டிப் பார்த்(து) ஏமாந்தன கண்கள்
இன்னுமேன் தாமதம் எதற்கிந்தப் பிடிவாதம்

முத்துச் சிதறும் சத்தத்தில் நான்
விழித்துக் கொள்கிறேன்
நீயா சிரித்தாய் - என்
கனவைக் கலைத்தாய்
ஆமாம்! நீதான்! நீயேதான்!
நீதான் வந்தென் வாசலில் நிற்கிறாய்
நான்தான் கதவைத் திறக்க வேண்டும்
சிதறிய முத்தில் ஒன்றை எடுத்துக்
கதவிடுக்கில் வைக்கிறேன்
திறந்தது கதவு திறந்தது சீஸேம்
இன்று முழுதும் கவிதைதான், வா!

*13–11–2023*

## 52. இலக்கியம் ஓர் ஒத்திகை

உடலில்லாமல் வாழ்வதற்கே
இலக்கியம் ஓர் ஒத்திகை
எலும்பும் சதையும் பிரிந்த பிறகும்
இருப்போம் என்ற நம்பிக்கை

விழியில்லாமல் காண்பதற்கும்
செவியில்லாமல் கேட்பதற்கும்
வழியமைப்பதே இலக்கியமாம்
மொழியில் விடுக்கும் மூச்சுக் காற்றை
மௌனத்துக்குள் அளந்து பார்க்கும்
முயற்சியாம் இசைப் பயிற்சியாம்

உடலில்லாமல் வாழ்வதற்கே
இலக்கியம் ஓர் ஒத்திகை
எலும்பும் சதையும் பிரிந்த பிறகும்
இருப்போம் என்ற நம்பிக்கை

அனுபவங்களைக் கட்டி நிறுத்தி
அழகழகான களங்கள் அமைக்கும்
வாசலில் நின்று வாசகர்களை
வாஞ்சையோடு வரவேற்கும்
ரசிக்க வைக்கும் மகிழ்ச்சிதரும்
ரௌத்திரமும் பழகும்

ஆவேசத்தீ வளர்க்கும் அதில்
அநீதியைச் சுட்டெரிக்கும்

உடலில்லாமல் வாழ்வதற்கே
இலக்கியம் ஓர் ஒத்திகை
எலும்பும் சதையும் பிரிந்த பிறகும்
இருப்போம் என்ற நம்பிக்கை

கனவுத் தறியில் விதவிதமான
காட்சிகள் பல நெய்யுமாம்
நானெனும் பொய்யில் ஏறியமர்ந்து
நாடகங்கள் நடத்துமாம்
கடலின் அலைகள் கரையைத் தொட்டுக்
கடலுள் மீண்டு செல்லுமே
அதுபோல் இந்த உயிரும் அந்தக்
கடவுளுக்கே சொந்தமாம்

உடலில்லாமல் வாழ்வதற்கே
இலக்கியம் ஓர் ஒத்திகை
எலும்பும் சதையும் பிரிந்த பிறகும்
இருப்போம் என்ற நம்பிக்கை

*20–11–2023*

# 53. தேன்துளிகளும் தீப்பொறிகளும்

இந்தக் கவிதையில் இருந்து கொஞ்சம்
தேன்துளிகள் சிதறலாம்
அந்தக் கவிதையில் இருந்து சின்ன
தீப்பொறிகள் பரவலாம்
தேன்துளிகளும் தீப்பொறிகளும் சிந்தனையின் மூலம்
வார்த்தைகளை வார்த்தெடுக்கும் உணர்ச்சிகளின்
வேகம்

நெஞ்சத்தின் ஆழத்தில் உலைகொதிக்கும் நெருப்பில்
நேர்மையிலே புடம்போட்ட சொற்களுரு வாகும்
உருவான சொற்களிலே கருவாக வளர்ந்து - இவ்
வுலகத்துக் கொளிகூட்ட வரும்கவிதை யுண்டே
உயிருக்குள் பிறக்கின்ற ஒருமூச்சுக் காற்றில்
உண்மையெனும் தீபத்தை ஏற்றிவைத்துக் கையில்
ஏந்திவரும் பாவையவள் நடந்துவரும் போது - இங்கு
எத்தனையோ தேவதைகள் பூச்சொறிவ துண்டே
இந்தக் கவிதையில் இருந்து கொஞ்சம்
தேன்துளிகள் சிதறலாம்
அந்தக் கவிதையில் இருந்து சின்ன
தீப்பொறிகள் பரவலாம்

பனிபொழியும் இளங்காலை வரவழைக்கும் கவிதை
பரவசத்தில் உதிக்கின்ற பாடலொரு கவிதை
கனிரசத்தைக் கோப்பையிலே மொண்டுவரும் கவிதை

கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் கண்டுவரும் கவிதை
தனிமையிலே பாடங்கள் கற்பிக்கும் கவிதை
தர்க்கத்தின் அணைமீறிப் பறக்குமொரு கவிதை
மனிதனிடம் மகத்துவத்தை விதைக்குமொரு கவிதை
மன்றாடி நின்றாலும் வரமறுக்கும் கவிதை
அட!
தேனோ தீயோ இது வளர்கின்ற நெருப்பு
நானோ நீயோ இதற்கில்லை பொறுப்பு

இந்தக் கவிதையில் இருந்து கொஞ்சம்
தேன்துளிகள் சிதறலாம்
அந்தக் கவிதையில் இருந்து சின்ன
தீப்பொறிகள் பரவலாம்

*18–12–2023*

# பாடல் தலைப்புகள் அகரவரிசை


| | | |
|---|---|---|
| 1. | அடைக்கும் தாழ் உண்டா? | 48 |
| 2. | அவன் தீண்டத் தகாதவன் | 54 |
| 3. | அனைவருமே குருநாதர்களே | 76 |
| 4. | அன்னைத் தமிழே | 53 |
| 5. | ஆச்சர்யம்! | 47 |
| 6. | இதற்குத்தானே காத்திருந்தாய் | 81 |
| 7. | இலக்கியம் ஓர் ஒத்திகை | 105 |
| 8. | உளறி விட்டுப் போகிறேன் | 79 |
| 9. | எதையும் மாற்றவில்லையா? | 87 |
| 10. | எத்தனை விண்மீன்கள்! | 69 |
| 11. | எத்தனை வீணைகள் மீட்டுகிறாய்...! | 35 |
| 12. | எப்படி வணங்குவது? | 71 |
| 13. | எழுதிக் கொண்டே இருக்கிறேன் | 94 |
| 14. | என்ன மாயம் செய்கிறாளோ | 67 |
| 15. | என்னைப் பேச விடுங்கள்! | 91 |
| 16. | ஒருதுளிக் கண்ணீர்! | 25 |
| 17. | ஒவ்வொரு கதவாய்த் தட்டிப் பார்த்தும்.... | 73 |
| 18. | ஓர் எறும்பு ஊர்வலம் | 78 |
| 19. | கடவுள் எழுதும் கவிதையே | 96 |
| 20. | கலைந்து போனது கவிதையின் மௌனம் | 32 |
| 21. | கவிஞன் ஆக்குகிறேன் | 49 |
| 22. | கவிதையும் உரைநடையும் | 93 |
| 23. | காதலைப் பாடுகிறேன் | 39 |
| 24. | காதல் இல்லை என்றால் | 45 |

| | | |
|---|---|---|
| 25. | குறுக்குச் சுவர்கள் | 89 |
| 26. | சந்திக்கப் பாடுகிறேன் | 58 |
| 27. | சாளரக் கதவைச் சற்றே திறந்துவை! | 84 |
| 28. | செல்லம்மா கல்யாண வைபோகமே | 59 |
| 29. | சொல் பூத்த வனத்தில்...! | 37 |
| 30. | தன்னை இழத்தல் | 74 |
| 31. | திசையெங்கும் வாசல்களாம் | 42 |
| 32. | திறந்திடு சீஸேம் | 103 |
| 33. | தெய்வம் இவளா...! | 21 |
| 34. | தெருக்களின் பேச்சு | 30 |
| 35. | தென்னை மரம் கேக்குது | 51 |
| 36. | தேன்துளிகளும் தீப்பொறிகளும் | 107 |
| 37. | தோழன்–தோழி | 102 |
| 38. | நதியின் அலைகளில் | 41 |
| 39. | நானே முதல் ரசிகன் | 56 |
| 40. | நான் ஒரு பயணி | 57 |
| 41. | நீ தூவிய விதைகள் | 43 |
| 42. | பல பொழுதுகள் விடியும் | 33 |
| 43. | பலூன்காரனா? | 98 |
| 44. | பாரதி சின்ன பயல் | 65 |
| 45. | பிரித்துப் போடு | 27 |
| 46. | புதியதோர் உலகம் செய்வோம்! | 85 |
| 47. | புத்தகம் நீதான் | 83 |
| 48. | ப்ரபஞ்சக் கவிஞன்! | 97 |
| 49. | மணிப்பூரகச் செல்வியே! | 63 |
| 50. | மஹாகவி! | 100 |
| 51. | மூலக் கயிறண்ணே...! | 23 |
| 52. | வரலாற்றில் பங்கேற்க நான் அழைக்கிறேன் | 61 |
| 53. | வாழ்க பாரதம் | 28 |

# பாடல் முதலடி அகரவரிசை


| | | |
|---|---|---|
| 1. | அண்ணனுக்காகவே அர்ச்சனை | 62 |
| 2. | அந்தப் பறவையின் | 100 |
| 3. | அன்னைத் தமிழே | 52 |
| 4. | ஆன்மிகப் பாதையில் நான் | 56 |
| 5. | இதற்குத்தானே காத்திருந்தாய் | 80 |
| 6. | இந்தக் கவிதையில் இருந்து | 107 |
| 7. | உங்களைச் சூழ்ந்திருக்கும் | 90 |
| 8. | உடலில்லாமல் வாழ்வதற்கே | 105 |
| 9. | எதிரில் வந்து நின்று விட்டாய் | 70 |
| 10. | எந்தப் பாறையைச் | 77 |
| 11. | எழுதிக் கொண்டே | 93 |
| 12. | என் மனத்தை | 32 |
| 13. | என்ன மாயம் செய்கிறாளோ | 66 |
| 14. | என்ன? என் கவிதை எதையும் | 86 |
| 15. | என்னை உனக்கு நினைவிருக்கிறதா | 102 |
| 16. | என்னை விழுங்கிய இருட்டுக் | 68 |
| 17. | என்னோடு வாழ்ந்த நாட்களை | 84 |
| 18. | ஏணி ஏறிச் சென்று | 97 |
| 19. | ஒதுக்கி விடுங்கள் அவனை | 53 |
| 20. | ஒரு முனையில் | 30 |
| 21. | ஒருநாதனே பல | 75 |
| 22. | ஒவ்வொரு கதவாய்த் | 72 |
| 23. | ஒவ்வோர் அணுவும் | 108 |
| 24. | ஓடைக்குள்ளே | 23 |
| 25. | ஓருருவில் நீயடங்க | 42 |
| 26. | கவிதையாவது தன்னை | 73 |

27. காதலைப் பாடுகிறேன் 39
28. காதல் இல்லை என்றால் 45
29. சாளரக் கதவைச் சற்றே 83
30. சிந்திக்கப் பாடவில்லை 57
31. செல்லம்மா கல்யாண வைபோகமே 58
32. சொல் பூத்த 37
33. சொல்ல நினைத்ததைச் 92
34. சொல்வதற்கு முன் 48
35. தென்னை மரம் 50
36. நட்சத்திரங்களின் நடுவினிலே 55
37. நட்சத்ர மாலை 21
38. நதியின் அலைகளில் 41
39. நான் உளறுவதாகச் 78
40. நீ தூவிய விதைகள் 43
41. பலூன்காரனா? 98
42. பாரதி சின்ன பயல் 64
43. பூவுக்குப் பாரென்ன 46
44. பொன்னொளிக் 35
45. மக்கும் குப்பை 27
46. மனத்தில் உள்ள குறுக்குச் 88
47. வரலாற்றில் பங்கேற்க நான் 60
48. வறுமையைப் பற்றிப் 25
49. வாசல் பக்கம் வந்தால் 103
50. வாழ்க பாரதம் 28
51. வானம் பொழியப் 33
52. வித்தகன் இல்லைநான் 82
53. வேறொரு திரையில் 47